பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 22 வெள்ளிக்கிழமை 08.09.2023 கதிர் 301

# சுரேஷ் சாலே செய்திருப்பார்

## அடித்துக்கூறுகின்றார் சரத் பொன்சேகா

**சனல்-4தொலைக்காட்சிநிறுவனத்தின் காணொளியில் சொல்லப்பட்டதைப் போன்று உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் இராணுவப்புலனாய்வுப்பிரிவுப்பொறுப் பதிகாரி சுரேஷ் சாலே செயற்பட்டிருப் பார்என்றுநான்நம்புகின்றேன். எனவே இது குறித்து சர்வதேச விசாரணைக்கு ஆளும்தரப்பு ஒத்துழைக்கவேண்டும்.**

**இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா தெரிவித்தார்.**

**நாடாளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற சுகாதார அமைச்சர் கெஹெ லியரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக் கையில்லாபிரேரணை மீதான விவாதத் தில் உரையாற்றுகையில் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.**

**அவர் மேலும் தெரிவித்ததாவது:**

**காணொளி தொடர்பாக இப்பொழுது அதிகமாகப் பேசப்படுகிறது சனல்-4 ஊடக நிறுவனம் மேலும் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின் றன. உண்மையில் உயிர்த்த ஞாயிறு** ☞2

## இது ரகசியம் அல்ல!

சுகாதாரத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவுக்குஎதிரானநம்பிக்கையில்லாத் தீர்மானவரைவுமீதானவாக்கெடுப்புஇன்று நடக்க இருக்கின்றது. ஆளும் பொது ஜன பெரமுனவின் ஆதரவுடன் எப்படியும் அவர் இந்தக் கண்டத்தைக் கடந்துவிடுவார் என்றே தெரிகிறது. கடந்த இரு நாள்களாக இந்தத் தீர்மான வரைவு மீதான விவாதம் நடந்தது. ஆனால், சுகாதார அமைச்சரையும் அவரது செயற்பாடுகளையும் பற்றி அலசி ஆராய்ந்து கிழித்துத் தொங்கவிடுவதற்குச் சபையில் யாரும் இல்லை.

எல்லோரின் கவனமும் சனல் -4 ஒளிபரப்பிய காணொளி தொடர்பான தமது கருத்துக்களைத் தெரிவிப்பதிலேயே நாடாளுமன்றஉறுப்பினர்கள்அனைவரும் குறியாக இருந்தனர். சனல் -4 காணொலி பொய்யானது என்றோ அல்லது உண்மையானது என்றோ கருத்துக் கூறிக்கொண்டிருந்ததில் சுகாதார அமைச்சரைக் கண்டுகொள்வதற்கு எல்லோரும் மறந்துவிட்டார்கள். ☞2

## பல்கலை அனுமதிக்கு செப்டெம்பர் 14 முதல் விண்ணப்பிக்கலாம்

2022 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பல்க லைக்கழக அனுமதிக்கான விண்ணப்பம் கோரல் செப்டெம்பர் 14 முதல் தொடங்கவுள்ளதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர், சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித் ததாவது:

பல்கலைக்கழக அனுமதிக்கு விண் ணப்பிப்பதற்கான வழிகாட்டல் ☞2

## சனல் 4 தொலைக்காட்சிக்கு எதிராக கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

சனல் 4 ஆவணப் படத்திற்கு எதிராகவும், அந்தத் தொலைக்காட்சிக்கு எதிராகவும் அதிகாரிகள் உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி கொழும்பிலுள்ளபிரித்தானிய உயர்ஆணையளதிற்கு முன்பாகநேற்றுஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

தேசம் மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய இயக்கத்தால் மேற்படி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்ட முடிவில் பிரித்தானிய உயர்ஆணையரகத்திற்குக் கோரிக்கைக்கடிதமொன்றும் கையளிக்கப்பட்டது.

இந்தவிடயம்தொடர்பில் செய்தியார்ளகளிம் பேசிய அங்குனுகல்லேஶ்ரீவிணாநந்த தேரர் தெரிவித்ததாவது:

சனல் 4 ஆவணப்படம் இலங்கை புலனாய்வுப்பிரிவை இலக்கு வைத்து போலியான தகவல்களை வெளியிட்டுள்ளது. குறித்த காணொளியில் தெரிவிக்கப்பட்ட தகவல்கள் போலியானவை என்பதைக் கூட உறுதிப்படுத்தப்படாமலேயே வெளியிடப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் ☞2

## அரசியலுக்கு அடிபணியாத கல்விக்கொள்கைச் சட்டம்

### உறுதியளிக்கிறார் ஜனாதிபதி ரணில்

நாட்டின் கல்விக் கொள்கைகளை அரசியலுக்கு அடிபணிய விடாமல், அமைச்சர்களின் தேவைக்கேற்ப மாற்ற இடமளிக்காது, அதனை ஒரே சட்டக் கட்டமைப்பின் கீழ் கொண்டு வருவோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

பொருளாதாரச்சரிவுக்குப் பின்னர் இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் இந் நேரத்தில் நாட்டின் துரித அபிவிருத்திக்கானபுதியகல்வி முறையொன்று நாட்டுக்கு அவசியம்எனவும்ஜனாதிபதி வலியுறுத்தினார்.

எப்பாவல சித்தார்த்த மத்திய கல்லூரியின் 150 ஆவது ஆண்டுபூர்த்தி விழா நிகழ்விலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாட்டில் புதிய கல்வி முறைக்கான அவசியம் தோன்றியுள்ளது. அதற்கமைய அடுத்துவரும் 20 - 30 ஆண்டுகளுக்குப் பொருத்தமான வகையில் புதியகல்விச்சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். புதிய தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட விடயங்கள் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். ☞2

### கொக்குத்தொடுவாய்

## மனிதப் புதைகுழியில் இருந்து துப்பாக்கிச் சன்னங்களும் மீட்பு

(ந.லோகதயாளன்.)

மனித எலும்புக்கூடுகளுடன் துப்பாக்கி சன்னங்களும் காணப்படுவதாக முல்லைத்தீவுமாவட்டவிசேட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணியானது இரண்டாவது நாளாக நேற்றையதினம் இடம்பெற்றது. நேற்றைய பணிகள் நிறைவடைந்ததன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போது சட்ட வைத்திய அதிகாரி இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவித்ததாவது:

இன்று (நேற்று) இரு மனித எலும்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து பணிகள் இடம்பெறவுள்ளது. அகழ்வின் போது வேறு சில முக்கியமான தடயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்று துப்பாக்கி சன்னங்களுடையவை எனச்சந்தேகிக்கப்படும்உலோகத்துண்டுகள். முக்கியமான ஆதாரங்களில் இதுவும் ஒன்று அது தவிர கண்டெடுக்கப்பட்ட ஆதாரங்கள் பகுப்பாய்வின் பிற்பாடே அறியத்தரப்படும்.

மனித எச்சங்கள் முழுவதுமாக இன்னும் எடுக்கப்படவில்லை பகுதியளவிலேயே எடுக்கப்பட்டுள்ளன. உடுப்புக்களில் சில தடயம் இருக்கின்றன. இதனை விரிவாக ஆராய்ந்ததன் பின்னர்தான் இது தொடர்பாக கூறமுடியும்.

மனித புதைகுழிக்குள் இருந்து தான் துப்பாக்கி சன்னம் எடுக்கப்பட்டது. இரண்டு துண்டுகள் எடுக்கப்பட்டுள்ளன. அது துப்பாக்கி சன்னம் என்றே சந்தேகிக்கப்படுகின்றது. அடையாளங்களும் ☞2

## ஹெரோயின் எடுத்துவந்த கொழும்பு வாசி கைது

யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யும் நோக்குடன் உயிர்க்கொல்லி போதைப் பொருளான ஹெரோயினை எடுத்து வந்த கொழும்பு பகுதியைச்சேர்ந்தஒருவரைத் தாம் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மாலை 6 மணியளவில் யாழ்பபாணம் மத்தியபேருந்துநிலையத்தில் வைத்து சிறப்பு அதிரடிப் படையினரால் அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.

சந்தேகநபரிடமிருந்து 33 கிராம் ஹெரோயின் ☞2

## அடுத்த வாரம் கியூபா செல்கிறார் ஜனாதிபதி

'ஜி77குழு மற்றும் சீனா' உச்சிமாநாட்டில் உரையாற்றுவதற்காக ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க அடுத்த வாரம் கியூபா செல்லவுள்ளார்.

'தற்போதையஅபிவிருத்தி சவால்களில் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளின் பங்கு' என்ற தலைப்பில் 'ஜி77 மற்றும் சீனா' அரச தலைவர்கள் மாநாடு 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் கியூபாவின் ஹவானா நகரில் நடைபெறவுள்ளது.

கியூபா ஜனாதிபதி மிகயெல் டயஸ்-கனெல் (Migueld-iaz-Canel) விடுத்த உத்தியோகபூர்வ அழைப்பையடுத்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 'ஜி77 மற்றும் சீனா' அரச தலைவர்களின் உச்சி மாநாட்டில் ☞2

## 4,000 கிராம அலுவலர்கள் மிகவிரைவில் ஆட்சேர்ப்பு

வெற்றிடமாக உள்ள சுமார் 4000 கிராம அலுவலர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பான பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தில் உள்ளதாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக்க பிரியந்த தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாளை தொடர்பில் நம்பிக்கை இல்லாததொரு நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந் நாட்டைப் பொறுப்பேற்றார். குறிப்பாக, மக்களின் இயல்பு வாழ்க்கையை மீட்டுக்கொண்டு வருவதே எமக்கு வழங்கப்பட்ட முக்கிய பணியாக இருந்தது. ஆனாலும் ஜனாதிபதிப் பதவியை ஏற்ற பின்னர் எடுத்த தொலைநோக்குத்தீர்மானங்களினால் ஒரு வருட குறுகிய காலத்தில் நாட்டிலும், கிராமிய மட்டத்திலும் வறுமையைப் போக்கி, பொருளாதாரத்தை உயர்த்தும் வகையில் பல்வேறு குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்த முடிந்துள்ளது.

கிராம அளவில் பொது மக்களுக்கு சேவைகளை வழங்கும் ☞2

## வரிச் சட்டத் திருத்தம் சபையில் நிறைவேற்றம்

உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு 45 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இதன்போது சட்டமூலத்துக்கு ஆதரவாக 103 வாக்குகள் அளிக்கப்பட்டதுடன் எதிராக 58 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதன் மூலம் முறிகளை மீளவிநியோகிக்கஇணங்காத ஊழியர் நிதியங்கள் மீது 30 வீத வரி விதிக்கும் சட்டத்தை நடைமுறைப்படுத்த அனுமதி கிடைத்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று இரண்டாவது தினமாக உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு விவாதம் இடம்பெற்ற நிலையில் விவாதத்தின் இறுதியில் சட்டமூலத்துக்குசபைஅனுமதி அளிக்கின்றதாவென ☞2

## அகதித் தஞ்சம் பெறுவதற்காகவே ஆசார் மௌலானா கதை விடுகிறார்

### நீதி அமைச்சர் ராஜபக் ஷ தெரிவிப்பு

அகதித் தஞ்சத்தைப் பெறுவதற்காகவே ஆசாத் மௌலானா உயிர்த்த ஞாயிறு குறித்த அவிழ்த்து விட்டிருக்கின்றார் என்ற சாரப்பட நீதி அமைச்சர் கலாநிதி.விஜயதாச ராஜபக்ஷகருத்துத்தெரிவித்துள்ளார்.

''தற்பொழுது சனல்-4இல் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் (அவரது) புகலிடக் கோரிக்கையை பூர்த்தி செய்வதற்கு போதுமானதாக அமையும் என்று நான் கருதுகிறேன்'' என்று அமைச்சர் தெரிவித்தார்.

நீதி அமைச்சில் நேற்று செய்தியாளர்களுடன் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா உயிர்த்தஞாயிறுசம்பவத்தின் போது சூழ்ச்சி ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மக்களுக்கு முதன் முதலாகத் தெரிவித்தார். அந்தக் கருத்து நாடு முழுவதும் உள்ள மக்களிடையே பரவியுள்ளது.

அவர் ஓய்வுபெறும் தினத்தில்தான் குறித்த ☞2

## பாவக் கணக்குகளை தீர்த்துவிட முடியுமா?

### குமார் வெல்கம எம்.பி. கேள்வி

பாவக் கணக்குகளைத் தீர்க்க முடியுமா என்று நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம நேற்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் இடம்பெற்ற சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் என்ன நடைபெற்றது என்பதை வெளிப்படுத்துவதற்கு சனல்-4 தொலைக்காட்சியின் காணொளி தேவையில்லை நாம் அனைவருமே அதனை அறிந்திருக்கிறோம். நீங்கள் இந்த ஆசனத்தில் அமருகின்ற பொழுது உங்களுக்கு மேலாக கடவுள் இருக்கிறார் என்பதை மறந்துவிடவேண்டாம். ஒருவர் மக்களின் ஆதரவுடன் அரசுத் தலைவராக பதவி ஏறினார். மக்கள் அவரை நாட்டைவிட்டு விரட்டினார்கள். அவர் நாட்டை விட்டு வெளியேறினார். நாட்டை விட்டு வெளியேறி ஒவ்வொரு நாடாகச் சென்று மனைவியுடன் பொருள் கொள்வனவு ☞2

## இனி இது .....

அல்லது எப்படியும் ஆளும் தரப்புத் தனது பெரும்பான்மைப்பலத்தைபயன்படுத்தித் தோற்கடிக்கப்போகும் ஒரு தீர்மானத்தில் அதைப் பற்றிப்பேசி நேரத்தை வீணடிப்பதற்குப் பதில் சனல் - 4 காணொலி தொடர்பில் பேசுவது அரசியல் ரீதியில் இப்போது பயன்தரக்கூடியது என்று அவர்கள் கருதியிருக்கக்கூடும்.

ஆக மொத்தத்தில் மூன்று நாள்கள்விவாதத்தில்இரண்டு நாள்கள் சுகாதார அமைச்சர் பற்றிய குற்றச்சாட்டுக்கள் பெரும்பாலும்அலசி ஆராயப் படவில்லை. மூன்றாம் நாளான இன்று அது பற்றி ஒப்புக்குச் சப்பாணியாகச் சில கருத்துக்கள் முன்வைக் கப்படலாம்.

இதேவேளை, சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிப்பதா இல்லையா என்பதை வாக்கெடுப்புக்கு முன்பாகக் கூடி முடிவு செய்வது என்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்புத் தெரிவித்திருந்ததாகச் செய்திகள் வெளியாகி இருந்தன. ஆனால், அத்தகைய கூட்டங்கள் எதுவும் நேற்று மாலை வரை நடைபெறவில்லை.

தீர்மான வரைவை ஆதரிப்பதா, எதிர்ப்பதா, கலந்துகொள்ளாமல்விடுவதா என்று எந்தவிதமான முடிவையும் கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர்கள் கூடிப்பேசி எடுக்கவில்லை என்று தெரிகின்றது. வழக்கமாக இதுபோன்ற கூட்டங்களைக்கூட்டங்களை ஒழுங்குபடுத்தி நடத்துபவர் - சொல்லப் போனால் முடிவுகளை அறிவிப்பவர் - எம்.ஏ.சுமந்திரன்தான்.

இப்போது அவர் நாட்டில் இல்லை. ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையினர் மனித உரிமைகள்உயர்ஆணையர் ஆகியோரைச்சந்திப்பதற்காகச் சென்றுவிட்டார் என்பதால் கூட்டம் நடத்தப்படவில்லை. தமிழ் அரசுக் கட்சி இது தொடர்பில் கூடித் தனியாக ஆராய்ந்து ஒரு முடிவைத் தெரிவிக்கும் என்று கூறப்பட்டது எனினும் அது பற்றியும் ஒரு தகவலும் இல்லை. தமிழ்த் தேசிய ஜனநாயகக் கூட்டணியும் தனியாகக் கூடிய எந்த விதமான முடிவைத் தெரிவிக்கவில்லை.

ஆக மொத்தத்தில் சனல்-4 புண்ணியத்தில் கெஹலிய ரம்புக்வெலவின் மானம் மரியாதை கப்பலேறாமல் தப்பிவிட்டது. இன்று என்ன நிலை என்று பார்க்கலாம்!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சுரேஷ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தமான விடயம் தொடர்பில் சர்வதேச விசாரணைநடத்தப்படவேண்டும்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுக்களை நியமிப்பதால் எவ்விதமான பயன்களும் ஏற்படப் போவதில்லை. ஆகவேசர்வதேசவிசாரணை என்று முன்னெடுப்பதற்கு ஆளும் தரப்புச் சம்மதம் தெரிவிக்க வேண்டும்.

புலனாய்வுப் பிரிவில் செயற்பட்டசுரேஷ்சாலேதான் இந்த விடயங்களை செய்திருக்கிறார் என்பதை நான் நம்புகிறேன். ஏனென்றால் அவர் 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது இந்த நாடு முழுவதும் குண்டு தாக்குதல்களை அவர் நடத்தியிருந்தார்.

குறித்த காலத்தில் அவர் நாட்டில் இல்லை என்ற கருத்துச' சொல்லப்படுகிறது. புலனாய்வு பிரிவின் தலைவராக இருந்த சுரேஷ் சாலேவுக்கு, குடிவரவு,குடியகல்வுவிடயங்களைமாற்றும் அதிகாரம்கூட அவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

ராஜபக்ஷக்களின் இளவரசன் புலனாய்வு அதிகாரிகளைதாம்தொடர்புகொள்ளவில்லை என்றும் அவ்வாறு தொடர்பு கொள்வதற்கான வாய்ப்புகள்இல்லைஎன்றும் எப்சிஜடியில்தான் கூடிய நேரத்தைசெலவிட்டதாகவும் இப்போது கூறுகிறார்.

உண்மையில்இச்செயற்பாடுகள் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளைநேரில்சந்தித்து செய்கின்ற செயற்பாடுகள் அல்ல. அனைத்துமே தொலைபேசிகள் ஊடாக செய்கின்ற செயற்பாடுகளாகும்.

சுரேஷ் சாலே ராஜபக்ஷக்களின் கழிவறையை கழுவிக் கொண்டிருந்த ஒரு அதிகாரியாகவே தொடர்ந்து இருந்தார் என்பதை இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் - என்றார்.

## சனல் 4....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்க உட்பட பாதுகாப்புத்துறையின் பிரதானிகளுக்கும் தெரிவித்துள்ளதோடு, போலியான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் இவ்வாறான தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்துகின்றோம்.

மேலும், போலி தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு சுயாதீன நாட்டின்புலனாய்வுபிரிவினர் மீது சுமத்தப்பட்டுள்ள அடிப்படையற்ற குற்றச்சாட்டு தொடர்பில்விசாரணைகளை முன்னெடுக்குமாறு பிரித்தானிய ஆட்சியாளர்களை வலியுறுத்துகின்றோம். மேற்குறிப்பிட்ட கோரிக்கைகளை உள்ளடக்கியே கடிதத்தையே பிரித்தானிய உயர்ஆதில் கையளித்துள்ளோம் என்றார்.

## ஹெரோயின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

கொழும்பு தொட்டலங்க பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டவராவார்.

## 4,000 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டமைப்பான கிராம உத்தியோகத்தர் பதவிகளில் அதிகளவில் வெற்றிடங்கள் நிலவுகின்ற காரணத்தால், மக்களுக்கான நலன்புரி சேவைகள் உட்பட பல்வேறு அபிவிருத்திநடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிக்கல்கள் தோன்றியுள்ளன.

குறிப்பிட்ட மாவட்டங்கள், பிரதேசங்கள் மற்றும் நிறுவனங்களில் வெற்றிடங்கள் காணப்படலாம். அதே நேரம் இன்னும்சிலபிரதேசங்களில் மேலதிகமாக உத்தியோகத்தர்கள்இருக்கலாம்.எனவே தரவரிசையைப் பொருட்படுத்தாமல் அரச சேவை சமநிலைப்படுத் தப்பட வேண்டும்.

இந்த ஆட்சி, அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதைக் கொள்கை ரீதியில் இடைநிறுத்தி இருந்தாலும், தற்போது வெற்றிடமாக உள்ள சுமார் நான்காயிரம் கிராம உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பான பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

தற்போது, இணைய கிராம அலுவலர் (e-GN) வேலைத்திட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளது. இது நிர்வாக நடவடிக்கைகளின்போது மக்கள் தமக்கு அவசியமான ஆவணங்களைஇணையவழியில் பெற்றுக்கொள்வதற்கான ஒரு வேலைத்திட்டமாகும். நாடு முழுவதும் இந்த நவீன தொழிநுட்பப் பொறிமுறையை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் ஏழு மாவட்டங்களில் தற்போது செயல்படுத்தப்படுகிறது. குறிப்பாக களுத்துறை மாவட்டத்தில் 90 சதவீதமும் புத்தளம் மாவட்டத்தில் 50 சதவீதமும் செயற்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி, எதிர்வரும் காலங்களில், நாடு முழுவதிலும் உள்ள 14,022 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் டிஜிட்டல் மயமாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது - என்றார்.

## பாவக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தார். இப்பொழுது சனல்-4 காணொளி அல்ல மேலே இருக்கும் கடவுள் மெல்ல மெல்ல தண்டனை வழங்கும் செயற்பாட்டை தொடங்கியிருக்கிறார். அதில் முக்கியமானவர் தான் கோட்டாபய ராஜபக்ஷ.

இதற்கு அடுத்தபடியாக இருப்பவர் வீதியில் இப்பொழுது பணத்தை திரட்டி பாவத்தை கழுவுவதற்கு தயாராகி வருகிறார். அவர்தான் மைத்திரிபால சிறிசேன. இவர்களின் பாவக் கணக்குகளை தீர்க்க முடியுமா? அனைவருக்கும் தண்டனை கிடைப்பது நிச்சயம் - என்றார்.

## அகதித் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயம் சம்பந்தமான கருத்துக்களைபகிரங்கமாகத் தெரிவித்தார். ஆனால்சட்டமா அதிபராக அவர் இருந்த காலத்தில் குறித்த சம்பவம் சம்பந்தமான விடயங்களை ஆராய்கின்ற அனைத்து பொறுப்பும் அவருக்கே வழங்கப்பட்டிருந்தன.

உண்மையைக் கண்டறிவதற்காக எந்த ஒரு பொலிஸ் அதிகாரிகளையும் விசாரணைக்கு உட்படுத்தும் அதிகாரம் கூட அவருக்கு காணப்பட்டது. விசாரணைகளை நெறிப்படுத்தி சரியான பாதையில் கொண்டு செல்வதற்கான முழுமையான பொறுப்பும்கூட அவருக்குத்தான் இருந்தது.

முன்னாள் சட்ட மா அதிபர்தெரிவித்தகருத்துக்கள் தொடர்பில் உரிய தகவல்களைப் பெறுமாறு நாமும் பொலிஸாருக்கு அறிவுரைகளை வழங்கினோம். எனினும் சட்ட மா அதிபர் தன்னிடத்தில் பொலிஸார் வாக்குமூலம் பெறுவதை தவிர்க்கும் வகையில் நீதிமன்ற உத்தரவை பெற்றுக் கொண்டுள்ளார். சனல்-4 மட்டுமல்ல யாராக இருந்தாலும் தரவுகளை நமக்கு அளிப்பது சிறந்த விடயமாகும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமாக இதுவரை 42 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த விடயம் சம்பந்தமாக தகவல் தெரிந்த வேறு யாராவது இருப்பார்களா இருந்தால் தேசிய ரீதியாக மட்டுமின்றிசர்வதேசரீதியாக கூட அவர்களை அணுகுவதற்குதயாராக உள்ளோம்.

அசாத் மௌலான சம்பந்தமாக தற்பொ முது அறிக்கை தயாரிக்கப் பட்டுள்ளது. அவர் கிழக்கு மாகாண அரசியல்வாதி ஒருவருடன் சில காலம் தொடர்பிலிருந்து செயல்பட்டவராக உள்ளார். தற்பொழுது அவர் நாட்டிலிருந்து வெளியேறி சுவிர்ஸ்சர்லாந்து அல்லது வேறு ஒரு நாட்டில் புகலிடக் கோரிக்கையைமுன்வைத்து இருக்கின்றவராக உள்ளார்.

அவ்வாறான்ஒருவருக்கு தற்பொழுது சனல்-4இல் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் புகலிட கோரிக்கையை பூர்த்தி செய்வதற்கு போதுமானதாக அமையும் என்று நான் கருதுகிறேன் - என்றார்.

## வரிச் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைக்குதலைமைதாங்கிய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன சபையை கேட்டபோது, எதிர்க்கட்சி பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல வாக்களிப்பு கோரினார்.

அதற்கமைய வாக்களிப்புக்கு செல்லுமாறு சபாநாயகர் மஹிந்த யப்பா அபேவர்த்த அறிவிப்பை விடுத்தார். அதன் பிரகாரம் இலத்திரனியல் முறையில் வாக்களிப்பு மாலை 7மணியளவில்இடம்பெற்றது.

சட்டமூலத்துக்கு ஆளும் கட்சியுடன் இணைந்து எதிர்க்கட்சி தரப்பில் சுயாதீன உறுப்பினர்களாக இருக்கும் ஏ.எல்.எம். அதாவுல்லாஹ், நிமல் லான்சா ஆதரவாக வாக்களித்ததுடன் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசி சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களித்தார்.

அத்துடன் சட்ட மூலத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, விமல் அணி டலஸ் அணி எதிர்த்து வாக்களித்தனர். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் தயாசிறி ஜயசேகர, தமிழ் தேசிய கூட்டமைப்பில் சாணக்கியன் ஆகியோர் மாத்திரமே சபையில் இருந்து சட்டமூலத்துக்கு எதிராக வாக்களித்தனர். தமிழ் தேசிய மக்கள் முன்னணி வாக்களிப்பில் கலந்து கொண்டிருக் கவில்லை. வாக்களிப்பில் மொத்தமாக 63பேர் கலந்துகொண்டிருக் கவில்லை.

அதன் பிரகாரம் சட்டமூலத்துக்கு எதிராக 58 வாக்குகள் அளிக்கப்பட்டன. உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு 45 மேலதிக வாக்குகளால் திருத்தங்களுடன் நிறைவேற்றப் பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## மனிதப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றதுஅதுபகுப்பாய்வு செய்ததன் பின்னர்தான் இது தொடர்பான சரியான கருத்து தெரிவிக்க முடியும் என மேலும் தெரிவித்தார்.

கசம்பவ இடத்தில் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன், தொல்பொருள் சிரேஸ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ, முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ, யாழ்ப்பாணம்சட்டவைத்திய அதிகாரி செ.பிரணவன், சட்டத்தரணிகளானரணித்தா ஞானராசா, வி.கே.நிறஞ்சன், கொக்குளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கிராம சேவையாளர், தடயவியல் பொலிஸார், விஷேட அதிரடி படையினர் முன்னிலையில் அகழ்வு பணி நடைபெற்றிருந்தது.

## அரசியலுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், 1989இல், தொழில் வாய்ப்புக்களை இலக்குவைத்து'அசோசியேட்' பட்டம் வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதனை நடைமுறைப் படுத்துவதற்கான வாய்ப்பு அக்காலத்தில்இருக்கவில்லை. அதனை தற்போது மீண்டும் நடைமுறைப்படுத்த முடியும் என எதிர்பார்க்கிறேன்.

இலங்கை உலகிற்கு ஒரு பல்கலைக்கழகமாக இருக்க வேண்டும். கல்விக் கொள்கையை அரசியலுக்கு அடிபணிய இடமளிக்கக்கூடாது. மேலும் அமைச்சர்களின் தேவைக்கேற்ப மாற்றவும்இடமளிக்ககூடாது. கல்விக் கொள்கையைச் சட்டமாக்கி அதனைச் சீரான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் - என்றார்.

## அடுத்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்கேற்கவுள்ளார்.

இந்த அரச தலைவர் உச்சி மாநாட்டுடன் இணைந்ததாக இலங்கை மற்றும்கியூபா இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்தும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் கியூபா ஜனாதிபதிக்கும் இடையில் இருதரப்பு பேச்சும் நடைபெறவுள்ளது.

'ஜி77 மற்றும் சீனா' நாடுகளின் தலைவர்கள் உச்சிமாநாடானது ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுக்கு அமைய வளர்ந்து வரும் 134 நாடுகளை உள்ளடக்கிய மிகப்பெரிய அரசுகளுக்கிடையேயான குழுவாகக் கருதப்படுகிறது. மேலும் இது தென்பிராந்திய நாடுகளுக்குஅவற்றின்கூட்டுப் பொருளாதார நலன்களை வெளிப்படுத்தவும், அவர்களின் பொருளாதார நலன்களை மேம்படுத்தவும் மற்றும் கூட்டு பேச்சுக்களை நடத்துவதற்கான திறனை மேம்படுத்தவும் வாய்ப்பை வழங்குகிறது.

அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றில் உள்ள சமகால சவால்களை மதிப்பிடுவதற்கும், அதிக பலன்களை அடைவதற்கான கூட்டுத்தீர்வுகளைஆராயவும், குறிப்பாக தென் பிராந்திய நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பின் மூலம், வளர்ந்து வரும் நாடுகள் எவ்வாறு இணைந்து செயல்பட முடியும் என்பதை ஆராயவும் இந்த மாநாட்டின் ஊடாக மேலும் வாய்ப்பு ஏற்படும்.

அதன்படி, இந்த உச்சிமாநாட்டில், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகிய துறைகளில் மேம்பட்ட ஒத்துழைப்பை உருவாக்க தென் பிராந்திய நாடுகளில் மறுசீரமைப்புகள்மற்றும்புதிய அணுகுமுறைகள் குறித்த வழிகாட்டுதல்களைவழங்கும் 'ஹவானாபிரகடனத்தை'அரச தலைவர்கள் நிறைவேற்ற உள்ளனர்.

இந்த மாநாட்டில் ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

## பல்கலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையேடு ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை மின்னஞ்சல் ஊடாக அனுப்பிவைக்க முடியும்.

இந்த வழிகாட்டல் கையேட்டைபிரதேசமட்டத்தில்பதிவுசெய்யப்பட்டபுத்தக விற்பனை நிலையங்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட புத்தக விற்பனை நிலையங்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வளாகம் மற்றும் அஞ்சல் மூலமும்பெற்றுக்கொள்ள முடியுமென்பதுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின்இணையத்தளத்திலிருந்துபதிவிறக்கம் செய்ய முடியும்.

வழிகாட்டல் கையேடு விற்பனை செய்யப்படும் புத்தக விற்பனை நிலையங்கள் தொடர்பில் அறிந்துகொள்ள ugcac.lk எனும் இணையத் தளத்திற்குள் பிரவேசிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்த முறை தேசிய பல்கலைக்கழக கட்டமைப்பிற்குள் சுமார் 45,000 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்றுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

# போர் வைராக்கியத்துடன் சனல் – 4 செயற்படுகிறது

## நாமல் ராஜபக்ஷ கூறுகிறார்



சனல் 4 யுத்த வைராக்கியத்துடன் செயற்படுகிறது. கொள்கைக்கு அப்பாற்பட்டு, சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபடவேண்டியதேவைஎமக்கில்லை. ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் விசாரணைகள் அரசியலுக்காக பயன்படுத்தப்படும் வரை பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நியாயம் கிடைப்பதுசாத்தியமற்றதுஎன நாடாளுமன்ற உறுப்பினர் நாமல்ராஜபக்ஷதெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவுக்காகவே ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது என்றதவறானதொரு நிலைப்பாட்டைத் தோற்றுவிக்க ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள். நாங்கள் கொள்கை அடிப்படையில் செயற்படுகிறோமே தவிர சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபடவில்லை.

ஏப்ரல் 21குண்டுத்தாக்குதலை பொதுஜன பெரமுன தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டது என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் 2019ஆம் ஆண்டுக்குமுன்னர்2018ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெற்றது.

பொதுஜன பெரமுனவின் வெற்றிக்காக ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது என்று குறிப்பிடப்படுகிறது. குண்டுத் தாக்குதலில் ஈடுபட்ட ஒரு தற்கொலை குண்டுதாரி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் பிரசார மேடையில் கலந்துகொண்டார்.

பிரதான குண்டுதாரி ஒருவரின் தந்தை, மக்கள் விடுதலை முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினராகவும் இருந்தார். அவ்வாறாயின் இவர்கள் அனைவரும் கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் வெற்றிக்காக ஒத்துழைப்பு வழங்கினார்கள் என்று குறிப்பிட வேண்டும்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் பல்வேறு மட்டத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. 720 பேருக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டு 70 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தேசிய மட்டத்துக்கு அப்பாற்பட்டு அமெரிக்காவிலும் மூன்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

குண்டுத்தாக்குல்சம்பவம் மற்றும் விசாரணைகள் தற்போது தேர்தல் பிரசாரத்துக்காகப் பயன்படுத்திக்கொள்ளப்படுகிறது. ஆகவே அரசியல் நோக்கத்துக்காக இவ்விடயம் பயன்படுத்திக்கொள்ளப்படும் வரை குண்டுத்தாக்குதலின் உண்மை சூத்திரதாரியை கண்டுபிடிப்பதும், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதி கிடைப்பதும் சாத்தியமற்றது. -என்றார். (05)

# மூன்று மாதங்களுக்குள் 42 துப்பாக்கிச் சூடுகள்

## 22 பேர் சாவு; 17 பேர் காயம்

கடந்த 3 மாத காலப்பகுதிக்குள் மாத்திரம் நாடளாவிய ரீதியில் 42 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள்பதிவாகியுள்ளன. மேலும், இந்த துப்பாக்கிப் பிரயோகங்களின்போது 22 பேர் உயிரிழந்துள்ளதுடன், 17 பேர் காயமடைந்துள்ளனர்.

குற்றவாளிகள்தொடர்பில் சரியான தரவு முறைமை இன்மையேகுற்றச்செயல்கள் அதிகரிப்பதற்கு பிரதான காரணம் எனவும் எதிர்வரும் 3 மாதங்களுக்குள் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த விசேடவேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்படும் எனவும் மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை கட்டுப்படுத்துவதில் பொலிஸாரின் வகிபாகம் எனும் தொனிப் பொருளில் அரசாங்க தகவல் திணைக்களத்தில்நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

குற்றவாளிகள்தொடர்பில் சரியான தரவு முறைமை இன்மையே இந்த நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்குப் பிரதான காரணம். கடந்த 10 வருடங்களில் நாட்டில்ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு நபரின் முழுமையான விவரங்களைக் கொண்ட தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. ஆனால், அவற்றில் குறைபாடுகள் உள்ளன. இதன் காரணமாகவே குற்றச் செயல்களுடன் தொடர்புடைய தரப்பினர் சட்டத்திடமிருந்தும், பொலிஸாரிடமிருந்தும் தப்பித்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் தலைமறைவாகியுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் கடந்த 3 மாதங்களுக்குள் 42 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதன்போது 22 பேர் உயிரிழந்துள்ளதுடன், 17 பேர் காயமடைந்துள்ளனர். இவற்றுள் மேல் மாகாணத்தில் மாத் திரம் 16 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களும், தென்மாகாணத்தில் 10 சம்பவங்களும் பதிவாகியுள்ளன. 9 துப்பாக்கிதாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். கைது செய்யப்பட்ட 9 பேரில் இருவர் பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்தபோது பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிஉயிரிழந்துள்ளனர்.

17 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் இரு பாதாள குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒழுங்கமைக்கப்பட்ட இந்த பாதாள குழுக்களுக்கு இடையில் போதைப்பொருள் சம்பந்தமான தகராறுகள், தனிப்பட்ட குரோதங்கள் காரணமாக பழிவாங்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு பழிவாங்கும் நோக்கில் 14 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும்14துப்பாக்கி பிரயோகங்கள் தனிப்பட்ட காரணங்களுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை எதிர்வரும் 3 மாதங்களுக்குள் குற்றச் செயல்களை கட்டுப்படுத்தவும், சந்தேகநபர்களை கைதுசெய்யவும் விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். வெளிநாட் டில் இருந்துகொண்டு நாட்டில் பாதாள குழுக்களை செயற்படுத்தும் தரப்பினர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களைக் கைது செய்து சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்புடன் நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுத்துள்ளோம். குற்றச்செயல்களில் ஈடுபடும் ஒருவர் பொலிஸாரின் பிடியிலிருந்து நீண்ட காலத்துக்கு மறைந்து வாழ முடியாது. நிச்சயம் கைது செய்யப்படுவார். சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தக்க தண்டனை பெற்றுக் கொடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# லசந்தவை விரைவில் கொலை செய்க என கோட்டா எம்மிடம் தெரிவித்தார்

## ஆசாத் மௌலானா கூறுகிறார்



சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவை நாய் என தெரிவித்து அவரை கொலை செய்யவேண்டும் என கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்என தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் பேச்சாளர் ஆசாத் மௌலானா சனல் 4 இற்குத் தெரிவித்துள்ளார்.

மிக் விமான கொள்வனவில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் லசந்த விக்கிரமதுங்க செய்திகளை வெளியிட்டமை கோட்டாபய ராஜபக்ஷவை கடும் சீற்றத்துக்குள்ளாக்கியது என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பேச்சாளர் ஆசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

பிள்ளையானையும் என்னையும் அவசர சந்திப்பிற்கு அழைத்த கோட்டாபய ராஜபக்ஷ, லசந்தவிக்கிரமதுங்க கொலை செய்யப்படவேண்டும் எனத் தெரிவித்தார் என சனல் 4 இற்கு ஆசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

நாங்கள் கோட்டபாயவை அவரது அறையில் சந்தித்தோம் அவரது மேசையில் சண்டே லீடர் காணப்பட்டது, என குறிப்பிட்டுள்ள ஆசாத் மௌலானா, கோட்டாபய ராஜபக்ஷ லசந்த விக்கிரமதுங்கவை பள்ளா (நாய்) எனக் குறிப்பிட்டார் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த நாய் எப்போதும் என்னுடன் மோதுகின்றது. இந்த நாயை கொலை செய்ய வேண்டும். உங்களால் முடிந்தளவு வேகமாக அதனை செய்யுங்கள் என கோட்டாபய தெரிவித்தார் எனவும் மௌலானா தெரிவித்துள்ளார். (05)

# யாழில் சிறுமியின் கை அகற்றப்பட்ட சம்பவம்; முறையான விசாரணை நடத்தப்படவேண்டும்

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. வலியுறுத்து



யாழ். வைத்தியசாலையில் 8 வயது சிறுமியொருவரின் இடது கை சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் சுகாதார அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

சிறுமியின் கை அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடாக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. வெகு விரைவில் அறிக்கை கையளிக்கப்படும் என சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல பதிலளித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கை யில்லா பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் குறிப்பிட்டவை வருமாறு -

மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் வைத்தியசாலைகள் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றன.

அங்குசென்றுநிலைமைகளைகண்டறிய வேண்டும் என்று சுகாதார அமைச்சருக்கு கோரிக்கை விடுத்திருந்தோம். ஆனால் இதுவரை தீர்வு கிடைக்கவில்லை.

சுகாதார அமைச்சராக மாவட்ட, பிரதேச வைத்தியசாலைகளின் வளங்கள், ஆளணி பற்றாக்குறை தொடர்பாகவும் மற்றும் அதன் சேவைகள் தொடர்பிலும் அறியத்தவறியவராக இந்த அமைச்சர் இருக்கிறார்.

இதேவேளை கடந்த 2 ஆம் திகதி யாழ். வைத்தியசாலையில் ஏற்றுக்கொள்ள முடியாத வகையில் பணியாளர் செய்த தவறால் 8 வயது சிறுமியொருவர் தனது கையை இழந்துள்ளார்.

தவறான மருந்துகளால் காய்ச்சலுக்காக அனுமதிக்கப்பட்ட சிறுமியின் கையை சத்திர சிகிச்சை மூலம் நீக்கியுள்ளனர். இதற்கு நாங்கள் பொறுப்பு அல்லர் என்று கூறிவிட முடியாது. சிறுமியின் கை அகற்றப்பட்டமை ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. இந்த விடயம் தொடர்பாக நீங்கள் அறிந்துள்ளீர்களா? இது தொடர்பான விசா ரணை எந்த வகையில் அமையும் என்றும் கூற வேண்டும். - என்றார்.

இதன்போது எழுந்து பதிலளித்த அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, இந்த சம்பவம் தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடாக விசாரணை முன்னெடுக்கப்படுகிறது. அது தொடர்பில் அறிக்கையொன்று கையளிக்கப்படும்.- என்றார். (05)

# 45 ஆயிரம் மாணவர்களுக்கு இந்தாண்டு பல்கலை அனுமதி

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கூற்றுப்படி, 2022/23 கல்வியாண்டில் பல்கலைக்கழக கல்விக்காக 45,000 மாணவர்கள் பதிவு செய்யப்படவுள்ளனர்.

இது தொடர்பான விண்ணப்பங்கள் எதிர்வரும் செப்ரெம்பர் 14ஆம் திகதி முதல் ஏற்றுக்கொள்ளப்படும் என அதன் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

மேலும், விண்ணப்பக் கையேட்டை அங்கீகரிக்கப்பட்ட புத்தக விற்பனை நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளார். (05)

# போதையில் வான் நோக்கி சுட்ட இராஜாங்க அமைச்சர்

## மாதிவெலவில் சம்பவம்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இராஜாங்க அமைச்சர் ஒருவர் மாதிவெலவில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினரின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு முன்பாக அவருக்கு வழங்கப்பட்ட கைத்துப்பாக்கியால் வானத்தை நோக்கி பல முறை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மதுபோதையில் காணப்பட்ட இவர், மாடி வீட்டு பல்கனியிலிருந்து மூன்று முறைகள் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டார் எனவும் கூறப்படுகிறது.

செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினரால் உயர் அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (05)

# செல்வம் எம்.பிக்கு பிணை

சுதந்திர தினத்தை அரசுக்கு எதிரான கரிநாளாக பிரகடனப்படுத்தி பேரணியில் பங்களித்தனர் என பொலிஸாரால் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் முன்னிலையாகாமைக்காக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள செல்வம் அடைக்கலநாதன் எம்.பி புதன்கிழமை மதியம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலையான நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தினத்துக்குஎதிர்ப்புத்தெரிவித்துயாழ்ப்பாணபல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பமான பேரணியில் பங்களித்தமை உள்ளிட்ட சில குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்ட சில அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ் வழக்கு கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் அழைக்கப்பட்டது. அழைக்கப்பட்ட போது நீதிமன்றில் பிரசன்னமாகாமைக்காக செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்டவர்களுக்கு கடந்த திங்கட்கிழமை யாழ். நீதிவான் நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. இவ்வாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சிரேஷ்ட சட்டத்தரணி என். சிறிகாந்த ஊடாக மன்றில் பிணை விண்ணப்பம் செய்திருந்தார். இதனை ஏற்றுக்கொண்ட மன்று ஆட்பிணையில் செல்வதற்கு செல்வம் அடைக்கலநாதன் எம்.பிக்கு அனுமதித்திருந்தது. இவ்வழக்கில் முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளரும் ரெலோவின் யாழ். மாவட்ட பொறுப்பாளருமான தியாகராஜா நிரோஷ் பிணை ஒப்பமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# சபிரி அடுக்குமாடி குடியிருப்புத்திட்ட பணிகளை பூர்த்தி செய்யுமாறு பிரசன்ன ரணதுங்க பணிப்பு

தங்காலை, மொரட்டுவ மற்றும் ரன்பொகுனுகம பிரதேசங்களை மையமாகக் கொண்ட சபிரி அடுக்கு மாடிகுடியிருப்புத்திட்டத்தின்பணிகளை இந்தவருடத்துக்குள்பூர்த்திசெய்யுமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு பணிப்புரை வழங்கினார்.

இந்த மூன்று வீட்டுத் திட்டங்களும் 132 வீட்டு அலகுகளைக் கொண்டிருக்கின்றன. அவை 30 வீடுகளைக் கொண்ட தங்காலை சபிரி அடுக்குமாடித் திட்டம், 72 வீட்டுத் தொகுதிகளைக் கொண்ட ரன்பொகுனுகம வீடமைப்புத் திட்டம் மற்றும் 30 வீட்டுத் தொகுதிகளைக் கொண்ட மொரட்டுவ வீடமைப்புத் திட்டமாகும்.

இந்த மூன்று வீட்டுத் திட்டங்களின் பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தில் இருக்கின்றன என தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. எஞ்சிய பணிகளை இவ்வருடத்திற்குள் பூர்த்தி செய்து விரைவில் மக்களிடம் கையளிக்குமாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த வீட்டுத் திட்டங்களின் நிர்மாணப் பணிகள் அரச பொறியியல் கூட்டுத்தாபனம் ற்றும் தனியார் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த வீட்டுத் திட்டங்களின் நிர்மாணப்பணிகள் 2022ஆம் ஆண்டு நிறைவடைய வேண்டும். எனினும், கொரோனா தொற்று, போராட்டம் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக குறித்த காலத்தில் திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை என தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி படிப்படியாக தீர்க்கப்பட்டு வருகிறது. எனவே வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளை விரைவாக ஆரம்பிக்க முடியும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த வீட்டுத் திட்டப் பணிகளை பூர்த்தி செய்வதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டை பெற அரசின் தலையீடு தேவைப்பட்டால் தேவையான ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நெருக்கடி உணரப்படுமா?

**உத்தியோகபூர்வ பணவீக்கம் மற்றும் நிலத்தடியில் உள்ள உண்மை புள்ளிவிவரங்கள் உலகம் முழுவதும் வேறுபட்டதாகத் தெரிகிறது, முந்தையது கீழ்நோக்கிய போக்கைக் குறிக்கிறது, மற்றொன்று அதற்கு நேர்மாறானது என்பது இப்போது நன்கு அறியப்பட்ட உண்மை. உண்மையில், கடந்த ஆண்டு பொது அமைதியின்மைக்கான மூல காரணம், எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயுவுக்கான வாரங்கள் மற்றும் மைல்கள் நீண்ட வரிசைகளைத் தவிர, இன்னும் நடைமுறையில் உள்ளது.**

**பொருளாதார நெருக்கடியால் மோசமான பாதிப்புக்குள்ளான மக்களுக்கான உதவியாக ஆளும் தரப்பு அஸ்வெசுமா (ஆறுதல்) என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியது. அதன் முதற்கட்டக் கொடுப்பனவு ஆவணி மாத இறுதியில் இருந்து வழங்கப்பட்டு வருகின்றது. பாதிக்கப்பட்ட மக்கள் நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கான செயற்றிட்டம் என்று ஆளும் தரப்பு இதனை வர்ணித்தாலும் அதைப் பெறுவதே அந்த மக்களுக்குப் பெரும் போராட்டமாக மாறி இருக்கிறது. ஆனி மாதம் முதலாம் நாள் முதல் இந்த உதவி வழங்கப்படும் என்று ஆட்சியாளர்கள் அறிவித்திருந்தபோதும் கடைசியில் அப்படி நடைபெறவேயில்லை.**

**இந்தத் திட்டத்திற்குள் உள்வாங்கப்படுபவர்கள் யார் யார் என்பதேகூட இன்னும் முழுமையாக முடிவு செய்யப்படவில்லை. இந்த உதவித் திட்டத்திற்கான பயனாளிகள் தெரிவில் தாம் பாதிக்கப்பட்டுள்ளோம் என்று மேன்முறையீடு செய்தவர்களின் கோரிக்கைகள் பரிசீலனையில் உள்ளன. அதற்கிடையில் உறுதிப்படுத்தப்பட்ட பயனாளிகளில்கூட அனைவருக்கும் முதல் மாதக் கொடுப்பனவு இன்னும் வழங்கப்படவில்லை. ஒரு சிறு எண்ணிக்கையானவர்களுக்கு மட்டுமே பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது.**

**அஸ்வெசுமா என்பது சர்வதேச நாணய நிதியத்தை (IMF) உள்ளடக்கிய ஒட்டுமொத்த பொருளாதாரத் திட்டத்தின் காரணமாக அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு திட்டம். நாணய நிதியம் முன்வைத்த பரிந்துரைகளுக்கு அமைய இலங்கை ஆளும் தரப்பால் உருவாக்கப்பட்ட திட்டம். பொருளாதார மறுசீரமைப்புப் பணிகளின்போது பாதிக்கப்பட்ட மக்கள் குறித்து அக்கறை செலுத்தப்படவேண்டும். ஆனால், அந்தத்திட்டமோ பாதிக்கப்பட்டவர்களை மேலும் துன்பத்துக்குள் தள்ளுவதாகவே இருக்கின்றது.**

**இலங்கைக்கான பிணை எடுப்புத் திட்டத்தின் தொடக்கம் முதலே, சீர்திருத்தங்களின் விளைவுகளிலிருந்து ஏழைகளை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தி வருகிறது. 2022 செப்டெம்பர் 1 நாயண நிதியத்துடன் ஊழியர் மட்ட ஒப்பந்தம் எட்டப்பட்ட பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில் இலங்கை அதிகாரிகளுடனான பணியாளர் மட்ட கலந்துரையாடலின் போதிருந்து நாணய நிதியம் இந்த விடயத்தை வலியுறுத்தி வந்திருக்கின்றது. .**

**இந்த ஆண்டு மார்ச் 20 அன்று நாணய நிதியத்தின் நிர்வாகக் குழுவின் ஊழியர் அளவிலான ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து, அதன் நிர்வாக இயக்குனர் கிறிஸ்டலினா ஜார்ஜீவா ஓர் அறிக்கையில் சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு இருக்க வேண்டும் என்று கூறி ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார்.**

**இதற்கமைய உருவாக்கப்பட்ட அஸ்வெசுமா திட்டத்தின் கீழ் பயனாளர்கள் 4 வகைப்படுத்தப்படடுள்ளனர். இடைநிலை, பாதிக்கப்படக்கூடிய, ஏழ்மை மற்றும் மிக ஏழ்மை என்கிற நான்கு நிலையில் அவர்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளனர். இதில் கடைசி இரண்டு பிரிவுகளில் ஆகக் கூடுதலாக 35 ஆயிரம் உள்ளன. இரண்டு குழுக்களின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாத உதவித்தொகையாக ரூ. 8,000 மற்றும் ரூ. 15,000 வழங்கப்படுகின்றது. இடைநிலை வகைக்குள் வருபவர்களுக்கு 2,500 ரூபாய் வழங்கப்படுகின்றது. அதாவது நாள் ஒன்றுக்கு 83 ரூபாய் வழங்கப்படுகின்றது. இது அண்மைக் காலம் வரையில் வசதியாக வாழ்ந்துவிட்டு கொரோனா மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக ஏழைகளானவர்களுக்கான உதவி. நாளொன்றுக்கு இந்த 83 ரூபாயை வைத்து ஒரு குடும்பத்துக்கு என்ன செய்யமுடியும் என்பது தெரியவில்லை.**

**மிக ஏழ்மையான குடும்பங்கள் மட்டுமே நாளொன்றுக்கு 500 ரூபாயைப் பெறுவார்கள். அது அவர்கள் குடும்பத்திற்குச் சொற்பமாகவாவது உதவும். இருந்தாலும் மூன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு இது ஒருநாள் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்குப் போதுமான தொகையல்ல.**

**அந்த உதவிகூட உரிய காலப்பகுதியில் கிடைக்கவில்லையாயின் ஏழைகள் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துவது எப்படி என்பதை ஆளும் மற்றும் அதிகார வர்க்கத்தினர் சிந்திப்பார்களா?**

# மீண்டும் பிள்ளையான்?

என். சத்திய மூர்த்தி



கடந்த 2019 உயிர்த்த ஞாயிறு தீவிரவாத தாக்குதல்களில் ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு பங்கு உண்டு என்று பிரித்தானியாவில் சனல்-4 காணொலி வெளியிட்டதை தொடர்ந்து, இங்குள்ள தமிழர்கள், ஏதோ தங்களது போர்கால பிரச்சினைகளுக்கு முடிவு கிடைத்து விட்டது போல் துள்ளி குதிக்கிறார்கள். கொசுறுக்கு, பிள்ளையானும் அந்தச் சிக்கலில் மாட்டிக்கொள்வார் என்று தெரிந்ததும் அவர்களது மகிழ்ச்சி இரட்டிப்பாகி உள்ளது.

இங்குள்ள தமிழர்களைப் பொறுத்தவரையில், ராஜபக்ஷாக்களுக்கு, அதிலும் குறிப்பாக கோட்டாபயவிற்கு ஏதா வது ஒரு விதத்தில் கஷ்டகாலம் தோன்றினால், அது தங்களது தனிப்பட்ட வெற்றி என்ற கணக்காக்கத் தொடங்கிக் கன காலம் ஆகிவிட்டது. அவ்வாறுதான், கடந்த வருடம் பொருளாதாரப் பிரச்சினையும் அறகலய போராட்டமும் நாடு முழுவதையும் ஆட்டிப்படைத்தபோது, தமிழர்கள் மட்டும், முன்பு யாம் பெற்ற துன்பங்கள் இந்த வையகம் முழுவதும் பரவட்டும் என்ற மட்டில் செயலாற்றினர்.

அதிலும் குறிப்பாக, ஒவ்வொரு ராஜபக்ஷவாகப் பதவி விலக நேர்த்த போதும், அதில் மனநிறைவு பெற்றனர். அது மனநிறைவு என்பதால்தான், தென்னிலங்கை போன்று அவர்கள் அதனைக் கொண்டாடவில்லை. மாறாக, முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்ற ரீதியிலேயே அந்தப் பிரச்சினைகளையும் அணுகினார்கள்.

அந்த விதத்தில், தற்போதைய சனல்-4 காணொலியும், தமிழர் பிரச்சினைகள் குறித்த விடயம் அல்ல. என்றாலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலில், தலைநகர் கொழும்பு மற்றும் கிழக்கே மட்டக்களப்பிலும், தேவாலயங்கள் தாக்கப்பட்டதில் தமிழர்களும் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்க விடயம். ஆனால், தமிழர்களின் ஆழ்ந்த உணர்வில் அந்த பயங்கரம் அடிமட்டத்தில் பதியவில்லையோ என்ற சந்தேகம் இருந்தது என்பதே உண்மை.

எவ்வாறு, பிற்காலத்தில் அறகலய போராட்டத்தை ஜீஜுபி லெவலுக்கு தமிழர்கள் தரித்தார்களோ, அவ்வாறே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களையும் பார்ப்பதற்கு, இனப்போர் அவர்களை தயார்படுத்தி இருந்தது.

### கோரச் சாவுகள்

தமிழர்களுக்கும், இலங்கை மக்கள் அனைவருக்குமே சனல்-4 புதியதல்ல. இனப்போரின் கடைசி காலகட்டத்தில் அரங்கேறிய அகோரங்களை அந்தத் தொலைகாட்சி நிலையம் வெளியிட்டதைத் தொடர்ந்து, உலகளவில் பேசுபொருளானது. அதிலும் குறிப்பாக விடுதலை புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனது பன்னிரெண்டு வயது மகன் பாலசந்திரனின் கோரச் சாவு அனைவரது மனதையும் உலுக்கியது.

அந்தக் காணொலியின் உண்மைதன்மை குறித்து பல்வேறு ஆய்வறிக்கைகளும் அப்போது வெளியிடப்பட்டன. அவை அனைத்துமே, பாலசந்திரனை இலங்கை அரச படையினர் பச்சிளம் குழந்தை என்றும் பாராமல் அருகிலிருந்தே சுட்டு கொன்றனர் என்ற முடிவிற்கே வந்தன. அந்தக் காணொலியால் மனம்வலித்த மக்கள் அதனை வேறு எந்தவிதத்திலும் கருத இடமிருக்கவில்லை. இங்கு என்றல்ல, இந்தியா மற்றும் உலகநாடுகள் அனைத்திலுமே இதுதான் அன்றைய நிலை.

அந்த விதத்தில், பிரபாகரனின் மகனாக, போர்களத்தில் அருகிலேயே தனது கடைசி மாதங்களையும் ஆண்டுகளையும் கழித்த பாலசந்திரன் போரின் போக்கை அறிந்திருந்தாரோ இல்லையோ, அதன் வலியை உணர்ந்திருப்பார். அதிலும் குறிப்பாக, அவரது தந்தையாரும் அவரால் நியமிக்கப்பட்ட ஆயுதமேந்திய மெய்காப்பாளர்களும், அவ்வப்போதைய நிலைமையை பாலசந்திரனுக்கு விளக்கி இருப்பார்கள்.

விடுதலை புலிகள் இயக்கத்தின் பிற சிறார் போராளிகளை போல், களத்தில் இறங்கும் வாய்ப்பு பாலசந்திரனுக்கு (மட்டும்) கிடைக்காமல் இருந்திருக்கலாம். ஆனால், போர்களத்தில் என்ன எதிர் பார்க்கலாம் என்பது பற்றி அவருக்கு தெரிந்திருக்காமல் இருக்க வாய்ப்பே இல்லை என்றே கூற வேண்டும்.

இந்தப் பின்னணியில் பார்க்கும் போது, அவரது கடைசித் தருணங்கள் என்ற வகையில் வெளியிடப்பட்ட புகைப்படங்கள், ஓர் அப்பாவிச் சிறுவனையே நமக்குப் புடம்போட்டுக் காட்டுகின்றன. அந்தப் புகைப்படங்கள் வெளியான காலகட்டத்தில் எழுப்பப்பட்ட எதிர்வினை கேள்வி இதுதான். எதிரிகளால் சிறையெடுக்கப்பட்ட சிறுவன், பன்னிரெண்டே வயதாகி இருந்தாலும், தன் முன்னால் இருக்கும் அபாயத்தை உணராமலா இருந்திருப்பான்? அப்படியா, அவரை பிரபாகரன் வளர்த்திருப்பார்?

இந்தக் கேள்விகளுக்கான பதிலிலேயே அடுத்த கேள்விகளும் இருக்கிறது. அதாவது, தனக்கு வரவிருக்கும் அபாயத்தை அந்த அப்பாவி சிறுவன் உணர்ந்திருந்தால், அவனால் அவ்வாறு அமைதியாக இருந்திருக்க முடியுமா? அதாவது, வருவது வரட்டும், உயிர் போனால் போகட்டும், கடைசிவரை, பயமோ வருத்தமோ இல்லாமல் நான் வாழ்வேன் என்ற நிலையில் அந்தப் புகைப்படங்களில் தோன்றும் சிறுவன், உண்மையிலேயே எதிரிகளின் கைகளில் அப்போது இருந்தானா? அல்லது தனக்கு நம்பிக்கையான மெய்காவலர்களுடன் இருந்தானா? அவ்வாறென்றால், பாலசந்திரனைக் கொடூரமாகக் கொன்றது, அரசபடைகளா? அல்லது, அவர் அரச படைகளிடம் சிக்கி கொடூரமானவகையில் சித்திர வதை செய்யப்படக்கூடாது என்று அவரது மெய்காவலர்களே அவரது உயிரை எடுத்தார்களா? அவ்வாறு செய்வதற்கு அவர்களுக்கு பிரபாகரனே உத்தரவிட்டிருந்தாரா? அவ்வாறென்றால், பாலசந்திரனிடம் சயனைட் குப்பி கொடுக்கப்பட்டிருக்கவில்லையா?

### அதே கேள்விகள்

இதுபோன்ற கேள்விகள் எல்லாம், அப்போதே கேட்கப்பட்டன. தற்ணபோது, சனல்-4 பெயர் மீண்டும் பிரஸ்தாபிக்கப்படும் போது, அதே கேள்விகளே எழுகின்றன.

காரணம், இலங்கை மற்றும் இனப்போர் சார்ந்த விடயங்களில், பி.ரி.எப் என்று அறியப்படும் பிரத்தானிய தமிழர் பேரவையின் கைப்பாவையாகவே சனல்-4 இயங்குகிறது என்ற குற்றச்சாட்டு அப்போது எழுந்தது. அது இப்போதும் தொடர்கிறது. வழமை போல். இங்குள்ள தமிழ் ஊடகங்கள் அதுபோன்ற செய்திகளுக்கும் குற்றச்சாட்டுகளுக்கும் இடமளிக்கவில்லை.

அந்தச் செய்திகள் அல்லது குற்றச்சாட்டுகளின்படி சனல்-4 இல் பணியாற்றும் ஷிராணி சபரத்தினம் என்ற தமிழ் வம்சாவளி பெண்ணும் அவருடன் பணியாற்றும் அவரது கணவரான ஸ்டுவர்ட் காஸ்கிரோவ் என்ற இருவருமே, விடுதலை புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்கள். இவர்களில் ஷிராணி, இனப்போர் காலத்திலும், அதற்கு பின்னரும் கூட, வெவ்வேறு கடவுசீட்டுகள் மூலம் யாழ்பாணம் வந்துசென்றிருக்கிறார் என்ற செய்தியும் மீண்டும் பதிவேறி இருக்கிறது.

### நம்பகத்தன்மை

இவ்வாறான குற்றச்சாட்டுகளில் உண்மை இருந்தால், அது சனல்-இன் நம்பகத்தன்மையை உள்நாட்டிலேயே வெகுவாகப் பாதிக்கும். இதுவே, வெளிநாடுகளுக்கும் அங்குள்ள சாதாரண மக்களுக்கும் பொருந்தும். என்ன, இது போன்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து அந்த நாடுகளில், அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரச தரப்புகள் எந்தவித பரப்புரையையும் முன்னெடுக்கவில்லை என்பதே சனல்-4 செய்திகளுக்கு ஒருவித நம்பகத்தன்மையை ஏற்படுத்திவிட்டது எனலாம்.

அதேசமயம், இலங்கை அரசை எவ்வாறேனும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பொறிமுறைக்குள் சிக்கவைக்க வேண்டும் என்ற மேனாட்டு அரசுகளின் அஜெண்டாவிற்கு. சனல்-4 செய்தி பேருதவியாக இருக்கும். இது போன்ற ஊடகச் செய்திகள் இல்லாமலும் மேனாடுகளும் அவர்களால் முன்நிறுத்தப்படும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் இதே குற்றச்சாட்டுகளை முன் வைக்கலாம்.

இதற்கு முன்னரும் இலங்கை விடயத்தில் அவ்வாறு நடந்திருக்கிறது. ஆனால், ஊடக செய்தியையே தாங்கள் முன்னெடுத்துச் செல்வதாகக் கூறுவதும் ஒருவிதத்தில் நம்பகத்தன்மையை உறுதி செய்யும் என்ற எண்ணம் இன்னமும் பரவலாக இருக்கிறது.

### புதிய கண்டுபிடிப்புகள்

சனல்-4 காணொளியின் புதிய 'கண்டுபிடிப்புகள்' இரண்டு. ஒன்று, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னால், ராஜபக்ஷ குடும்பத்தவர்கள், குறிப்பாக கோட்டாபய, இருந்தார். என்பது. இரண்டாவது, அந்த சதி திட்டத்தில் பிள்ளையானும் பங்குவகித்தார் என்பது.

இதில் முதலாவது குற்றச்சாட்டு, அந்தத் தாக்குதல்கள் நடந்த சமயத்திலேயே பிரஸ்தாபிக்கப்பட்டது. இரண்டாவது புதிது. ஆனால். சனல்-4 வெளியீட்டை தொடர்ந்து, சஜித் பிரேமதாஸாவும், கொழும்பு கத்தோலிக்க திருச்சபை பேராயர் மால்கம் கர்தினல் ரஞ்சித் ஆண்டகையும் இது குறித்து சர்வதேச விசாரணை கோரியுள்ளனர்.

இவர்களில், சஜித் பிரேமதாஸா 2019 ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷாவிடம் தோல்வி அடைந்தவர். அவரது தோல்விக்கு, அலலது கோத்தாவின் வெற்றிக்கு, உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பும் ஒரு முக்கிய காரணம். எனவே அவரது ஆதங்கத்தைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால், கர்தினலோ தேர்தல் காலத்தில் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவை குறிவைப்பது போன்றே அறிக்கைகள் வெளியிட்டவண்ணம் இருந்தார்.

அதிலும் குறிப்பாக, தேர்தலை ஒட்டி, கோட்டாவிற்கே கத்தோலிக்கர்கள் வாக்களிக்கவேண்டும் என்றும் கூறினார். இதனை சனல்-4 காணொலி குறித்து நாடாளுமன்றத்தில் பேசிய எதிர்கட்சி தலைவரும் சுட்டிக்காட்டினார். ஊண்மை என்னவோ, கடந்த இரண்டு ஆண்டுகளாகவேனும், கர்தினலும், கோட்டாபய மற்றும் ராஜக்ஷக்களின் பெயர்களைக் குறிப்பிடாமல், அவர்களே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னணியில் இருந்தார்கள் என்று கோடிட்டு காட்டிவந்தார்.

### மேலை நாடுகளின் கரிசனை

இவற்றிற்கெல்லாம் அப்பால், புதிய சனல்-4 கண்டுபிடிப்புகளும் காணொலிகளும், இந்த மாதம் ஜெனிவா நகரில் கூடவிருக்கும் மனித உரிமை அமைப்பின் கூட்டத்திற்கு முத்தாய்புவைப்பதாகவே அமைந்துள்ளன. ஏற்கனவே, முந்தைய கூட்டதொடர்களில் ஒரு தலைபட்சமாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை இலங்கை அரசு எதிர்பார்த்த விதத்தில் செயல்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு தற்போதே முன்வைக்கப்பட்டுள்ளது.

அந்த வழமையான, பழமையான குற்றச்சாட்டுகளில், உயிர்த்த ஞாயிறு விசாரணை குறித்தும் சொல்லப்பட்டிருந்தது. தற்போது, சனல்-4 காணொலியின் அடிப்படையில், இந்த குறிப்பிட்ட விடயம் மேலும் தீவிரமாக முன்னெடுக்கப்படலாம். இதில் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு அப்பாலும் மேலைநாடுகளுக்கு கரிசனை இருப்பது எதிர்பார்க்ககூடிய விடயமே.

ஆனால், இவற்றிற்கெல்லாம் அப்பால், சனல்-4 காணொலியில் முக்கிய சூத்திரதாரியாக அவதரித்துள்ள பிள்ளையானின் முன்னாள் அரசியல் ஆலோசகர் என்று அறியப்படும் ஆசாத் மௌலானா கூறியுள்ள பல்வேறு விடயங்கள் குறித்தும் சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன. அவற்றில் முக்கியமாக, தற்போதைய அரச உளவுத்துறை இயக்குனர் சுரேஷ் சாலி, ஸஹ்ரான் உள்ளிட்ட தற்கொலை படையினரை சந்தித்து பேசியதாக மௌலான கூறியுள்ள விடயம் குறித்த சந்தேகங்கள் கிளப்பப்படுகின்றன.

ஆசாத் மௌலானாவின் கூற்றை மறுத்துள்ள சுரேஷ்சாலி, அவர் கூறியுள்ள காலகட்டத்தில்தான் மலேசியாவில் உள்ள இலங்கை தூதுவராலயத்தில் பணியாற்றினார் எனவும் தான் அந்தச் சமயத்தில் நாட்டிற்குள் இருக்கவில்லை என்றும் கூறியுள்ளார். அவர் கூறியுள்ள விடயத்தின் நம்பகத்தன்மை எளிதில் நிரூபிக்கக்கூடியதே. அவர் கூற்றில் உண்மை இருந்தால், ஆசாத் மௌலானாவும் சனல்-4 பொய் கூறுவதாக நம்ப வேண்டியிருக்கும். அது உண்மையானால், பிள்ளையான் என்று அறியப்படும் அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் குறித்த மௌலானவின் தகவலும் தவறு என்று கருதவேண்டியிருக்கும். அந்தவகையில், உள்நாட்டு, சர்வதேச விசாரஷ்ணை என்று தொடங்குவதற்கு முன்னர், சுரேஷ் சாலியின் கூற்றை சரியா-தவறா, என்பதை எளிதில் கண்டுபிடிக்க முடியும்தானே!


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swobpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# சர்வதேசக் கண்காணிப்புகளின்றி கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு நடைபெறுவது திருப்தியில்லை

## ரவிகரன் விசனம்

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு விவகாரம், சர்வதேச கண்காணிப்பின்றி இடம்பெறுவது திருப்தியளிக்கவில்லை என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இந்த அகழ்வுப் பணியில் தொல்லியல் துறையினர் மீதும் தமக்கு நம்பிக்கை இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், அந்த அகழ்வுப் பணிகளைப் பார்வையிட்டபின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி தொடர்பான விடயத்தில், கடந்த ஜூலை மாதம் இடம்பெற்ற ஆரம்பக்கட்ட அகழ்வுப் பணிகளில் 13 உடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன எனத் தகவல்கள் வெளிவந்தன.

அதன் பின்னர் அந்த அகழ்வுப் பணிகள் நிறுத்தப்பட்டு, கடந்த 05ஆம் திகதி மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. எனினும் முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக அகழ்வுப் பணிகள் தாமதமாகி, செப்ரெம்பர் 06ஆம் திகதி இந்த அகழ்வுப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த அகழ்வுப்பணி தொடர்பில் கடந்த ஜூலை மாதம் 13ஆம் திகதி முல்லைத்திவு நீதிமன்றில் இடம்பெற்ற கலந்துரையாடலில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறைசார்ந்தவர்களும் இந்த அகழ்வுப் பணிகளில் இணைத்துக் கொள்ளப்படவேண்டும் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. ஆனால் இங்கு அவ்வாறு யாழ். பல்கலைக்கழகத் தொல்லியல் துறைசார்ந்தவர்கள் இணைத்துக்கொள்ளப்படவில்லை.

தற்போது மக்கள் மத்திலில் தொல்லியல் துறையினர் மீது பாரிய சந்தேகங்கள் எழுந்துள்ளன.

ஏன் எனில் குருந்தூர்மலை விவகாரத்தில், தொல்லியல் துறை தொடர்பில் முல்லைத்தீவு நீதிமன்று கடந்த ஒகஸ்ட் மாதம் 31ஆம் திகதி கட்டளையொன்றை வழங்கியிருந்தது. அந்தக் கட்டளையில் தொல்லியல் துறையினர் நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளையை மூன்றுதடவைகள் மீறியதுடன், குருந்தூர் மலையில் விகாரை கட்டுவதற்கு ஒத்துழைத்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந் நிலையில் தொல்லியல் துறையினர் இந்த அகழ்வுப் பணி விடயத்திலும் சரியாக நடந்துகொள்வார்களென நாம் எதிர்பார்க்க முடியாது.

அதேவேளை இந்த மனிதப் புழி விவகாரத்தில் சர்வதேசகண்காணிப்புத் தேவை எனவும், சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையிலேயே இந்த அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்படவேண்டும் எனவும் எமது தமிழ் மக்கள், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.



நாங்கள் நீதிமன்றையும், சட்டவைத்திய அதிகாரிகளையும் மதிக்கின்றோம். ஆனால் அனைத்துத் தரப்பினரும் இந்த விடயத்தில் சரியாக செயற்படுவார்கள் என எதிர்பார்க்க முடியாதுள்ளது.

குறிப்பாக பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஆகியோரே இங்கு அதிகமாகக் காணப்படுகின்றனர்.

இந் நிலையில் மக்கள் சார்பாக அங்கு சட்டத்தரணிகள் மாத்திரமே புதைகுழி வளாகத்திற்குள் செல்லமுடியும். மக்களின் பிரதிநிதிகளாக வேறு யாரும் புதைகுழிப் பிரதேசத்திற்குள் செல்லமுடியாது.

எனவே எமக்கு சந்தேகங்கள் எழாதவாறு இந்த அகழ்வுப்பணிகள் இடம்பெறுவதுடன், உண்மைத் தன்மை வெளிப்படவேண்டும்.

சர்வதேச மற்றும், ஐ.நாவின் கண்காணிப்புக் குழுக்கள் இல்லாமல் இந்த அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்படுவதில் எமக்குத் திருப்தி இல்லை என்பதையும், தொல்லியல் திணைக்களத்தையும் நாம் நம்பப் போவதில்லை எனவும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் - என்றார். (05)

# தேசிய புலனாய்வு இயக்குநர் பதவியிலிருந்து சுரேஸ் சாலேயை உடன் பதவி நீக்கவேண்டும்

## விஜித ஹேரத் வலியுறுத்து



தேசிய புலனாய்வு பிரிவின் இயக்குநர் சுரேஸ் சாலேயை உடனடியாக பதவி நீக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள தேசிய மக்கள் சக்தி, பிள்ளையானிற்கு எதிராக பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் வெளியாகியுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பிலேயே தேசிய மக்கள் சக்தி இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

செய்தியாளர் மாநாட்டில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜிதஹேரத் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

தேசிய புலனாய்வு பிரிவின் இயக்குநராக சுரேஸ் சாலே தொடர்ந்தும் பணியாற்றும் சந்தர்ப்பத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வது அர்த்தமற்றது என அவர் தெரிவித்துள்ளார்.

சனல் 4 வீடியோவில் மௌலானா தெரிவித்துள்ளது போல உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதல்வர் பிள்ளையானிற்கும் சுரேஸ் சாலேயிற்கும் நெருங்கிய தொடர்புள்ளது அவர்கள் கோட்டாபயவுடன் காணப்படும் படங்கள் உள்ளன, பிள்ளையானுக்கு உள்ள தொடர்பை மௌலானவே வெளிப்படுத்தியுள்ளார், எனவும் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

உண்மையான குற்றவாளிகள் இன்னமும் சுதந்திரமாக நடமாடுகின்றனர் விசார ணைகள் உரிய கோணத்தில் இடம்பெறவில்லை, தற்போது வெளிவந்துள்ள விடயங்கள் சூத்திரதாரிகள் மற்றும் நோக்கங்களை வெளிப்படுத்தியுள்ளன எனவும் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக கோட்டாபய பதவியேற்ற உடன் சுரேஸ் சாலே புலனாய்வு பிரிவின் இயக்குநராக நியமிக்கப்பட்டார். இதற்கும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கும் தொடர்பிருக்கவேண்டும் எனவும் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ தற்போது ஜனாதிபதி அல்லர். அவருக்கு விடுபாட்டுரிமை இல்லை என்பதால் அவர் குறித்த விசாரணைகளை மீள ஆரம்பிக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# ஆசாத் முஸ்லிம் சமூகத்தின் முதல் துரோகி கடுமையாக தண்டிக்கப்படவேண்டிய ஒருவர்!

## முஷாரப் கடும் விசனம்

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் இடம்பெறவுள்ளது என்பதை அறிந்தவுடன் அதுபற்றி ஆசாத் மௌலானா எமது சமூகத்திடம் குறிப்பிட்டிருக்கலாம், எமது சமூகத்தைக் காவு கொடுக்க போகிறார்கள், அதை தடுங்கள் என்று ஜம்-யத்துல் உலமா சபையிடம் குறிப்பிட்டிருக்கலாம். அல்லது சம்பவம் இடம்பெற்ற மறுகணமேனும் உண்மையை பகிரங்கப்படுத்தியிருக்கலாம். எதனையும் அவர் செய்யவில்லை. ஆகவே அசாத் மௌலானா இந்த நாட்டினதும், முஸ்லிம் சமூகத்தினதும் முதல் துரோகி. அவர் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும் என ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.முஷாரப் சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

சனல் 4 வெளியிட்டுள்ள காணொலியை தொடர்ந்து அன்ஷித் அசாத் மௌலானா தற்போதைய பிரதான பேசுபொருளாக காணப்படுகிறார்.

இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் அன்று முதல் இன்றுவரை நாட்டுபற்றுடன் வாழ்கிறார்கள். இரண்டாம் இராஜசிங்க மன்னனை பிரித்தானிய படையினர் துரத்திச் சென்ற போது அவரை பாதுகாக்க ஒரு முஸ்லிம் பெண்மணி தனது உயிரை துறந்த வரலாற்று சம்பங்களும் உள்ளன. வரலாற்றுக் காலம் முதல் முஸ்லிம் சமூகத்தினர் அரசுக்கும், நாட்டுக்கும் பற்றாளர்களாக வாழ்ந்துள்ளார்கள். உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலை தொடர்ந்து முஸ்லிம் சமூகத்தினர் சொல்லெனாத்துயரத்தை எதிர்க்கொண்டார்கள்.

இந்த நிலையை ஏற்படுத்தியவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

சனல் 4 காணொலி ஊடாக அசாத் மௌலானா என்பவர் பேசிக்கொண்டிருக்கிறார். ஜெனிவா கூட்டத் தொடர் இடம்பெறவுள்ள நிலையில் அசாத் மௌலானா ஒரு கூலியாளராக செயற்படுகிறார் என்று குறிப்பிடுவது பிறிதொரு விடயம். ஆனால் குறிப்பிடும் விடயம் உண்மையாயின் இந்த நாட்டினதும், முஸ்லிம் சமூகத்தினதும் முதல் துரோகி அசாத் மௌலானா என்பதை உயரிய சபையில் குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பம் இடம்பெறவுள்ளது என்பதை அறிந்தவுடன் அசாத் மௌலான எமது சமூகத்திடம் குறிப்பிட்டிருக்கலாம், எமது சமூகத்தை காவு கொடுக்க போகிறார்கள்.

இதனை தடுங்கள் என்று ஜம்யத்துல் உலமா சபையிடம் குறிப்பிட்டிருக்கலாம். அல்லது சம்பவம் இடம்பெற்ற மறுகணமேனும் உண்மையை பகிரங்கப்படுத்தியிருக்கலாம்.

அசாத் மௌலானா அன்று ஒரு கைக்கூலியாக செயற்பட்டமையைப்போன்று இன்றும் ஒரு தரப்பினரின் கைகூலியாகவும், முகவராகவும் செயற்படுகிறார். ஆகவே அசாத் மௌலானாவை எமது சமூகத்தின் சார்பில் கடுமையாக தண்டிக்கஆசைப்படுகிறேன். அசாத் மௌலானாவை ஒரு கருவி-யாக கொண்டு ஒரு நாடகம் அரங்கேற்றப்படுகிறது. - என்றார். (05)

# வரலாற்றில் முதல் தடவையாக வைத்தியத் துறைக்கு தெரிவான ஜனுசிகாவுக்கு பெஸ்ட் ஒவ் யங் கௌரவம்

## நிந்தவூருக்குப் பெருமை சேர்ப்பு









நிந்தவூர் கமு/கமு/அல் அஷ்ரப் தேசிய பாடசாலையில் இருந்து வைத் தியத்துறையில் கால் பதிக்கும் குணசேகரம் ஜனுசிகாவை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு புதன்கிழமை இடம்பெற்றது.

நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் அமைப்பின் ஏற்பாட்டில் அமைப்பின் தலைவர் ஐ.எம். நிஸ்மி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரீ.கலையரசன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். கௌரவ அதிதிகளாக நிந்தவூர் கோட்டக் கல்வி பணிப்பாளர் எம் சரிபுத்தீன், நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையின் அதிபர் ஏ.அப்துல் கபூர், பெஸ்ட் ஒப் யங் அமைப்பின் செயலாளர் ஏ.புஹாது, ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிந்தவூரின் வரலாற்றில் முதல் தடவையாக வைத்திய துறைக்கு தெரிவு செய்யப்பட்ட முதலாவது தமிழ் மாணவி என்ற திற மையை தனதாக்கிகொண்டுள்ள ஜனுஷிகாவை பாராட்டி நாடாளுமன்ற உறுப்பினர் ரீ. கலையரசன் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் மற்றும் பரிசில் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. இதன்போது கருத்து தெரிவிக்கையில் வைத்தியத்துறைக்கு தெரிவான மாணவி ஜனுஷிகா, தான் சிறு வயது முதல் ஒரு சிறுபிள்ளை வைத்திய நிபுணராக வரவேண்டும் என்பது தனது இலட்சியம் என்றும், அதனை எதிர்காலம் நிச்சயம் கட்டியம் கூறி நிற்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் தான் ஒரு வைத்திய நிபுணராக வெளிவந்ததும் ஏழை எளிய மக்களுக்கு நிச்சயம் இலவசமாகவே தன்னுடைய சிகிச்சை அளிப்புக்கள் இடம்பெறும் எனவும் உறுதியளித்தார்.

இந்த மாணவி கல்விப் பொது தராதர சாதாரண தர பரீட்சையில் ஒன்பது பாடங்களிலும் அதிவிசேடசித்தி 09 ஏ பெற்றமைக்காக அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனமான நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் அமைப்பால் பரிசில் மற்றும் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (05)



# புற்றுநோயுடன் போராடும் மாணவன் உயர்தரப் பரீட்சையில் சிறப்புச் சித்தி

பாதுக்க பிரதேசத்தில் புற்றுநோயுடன் போராடி உயிரியல் பிரிவில் பரீட்சையை வெற்றிகரமாக எதிர்கொண்ட மாணவர் ஒருவர் தொடர்பில் செய்தி வெளியாகியுள்ளது.

யோஹான்தெவ்தி லின என்ற இந்த மாணவர் அபேக்ஷா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் பரீட்சைக்கு முகம்கொடுத்துள்ளார்.

அதற்கமைய, மாணவர் இரண்டு ஏ சித்திகளையும் ஒரு சி சித்தியையும் பெற்றுள்ளார்.

தேர்வுக்கு 6 மாதங்களுக்கு முன்பு எனக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது. வீட்டில் இருந்தே படித்தேன். பரீட்சைக்கு போகும்போது நடக்கக்கூட முடியாது. என் தந்தை என்னுடன் வந்தார்.

எனது எதிர்கால நம்பிக்கை மருத்துவராக வேண்டும் என்பதுதான். சுகாதாரத் துறையில் உள்ளவர்களுக்கு உதவ விரும்புகிறேன். - என சித்தியடைந்த மாணவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# சனல் – 4 இல் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை

## கர்தினால் மெல்கம் வலியுறுத்து

பிரித்தானியாவின் 'சனல் 4 ' செய்திச் சேவை வெளியிட்டுள்ள ஆவண தொகுப்பில் வெளியாகியுள்ள, உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதலின் பின்னணியில் இருந்ததாகக் கூறப்படுகின்ற பாரிய சூழ்ச்சி மற்றும் அதனூடனான சகல விடயங்களும், அதில் குறிப்பிடப்படுகின்ற நபர்கள் தொடர்பிலான விசாரணையொன்று சுயாதீன சர்வதேச விசாரணை குழு ஒன்றின் மூலமாக நடத்தப்பட வேண்டும் என கொழும்பு மறை மாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தினார்.

இந்த விசாரணை சுயாதீனமான முறையில் நடத்தப்பட வேண்டுமானால், இந்த விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற மற்றும் தற்போதும் புலனாய்வு பிரிவுகளைப் போலவே பொலிஸ் திணைக்களங்களில் உயர் பதவிகளில் இருக்கின்ற சகல அதிகாரிகளினது சேவைக் காலம், இந்த விசாரணை முடிவடையும் வரையில் இடைநிறுத்தப்பட வேண்டும் என மேலும் குறிப்பிட்டார்.

தற்போது வெளியாகியுள்ள 'சனல் 4 ' செய்திச் சேவை ஆவணத்தொகுப்பில் வெளியாகியுள்ள விடயங்கள் தொடர்பில் இந்நாட்டு மக்கள் அனைவரும் தங்களது கவனத்தை செலுத்துமாறும் பேராயர் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார். பிரித்தானியாவின் 'சனல் 4' செய்திச் சேவை வெளியிட்டுள்ள



ஆவண தொகுப்பு குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் ஊடக சந்திப்பொன்று கொழும்பு பேராயர் இல்லத்தில் நடைபெற்றது. இதன்போதே கர்தினால் ஆண்டகை மேற்கண்டவாறு தெரிவித்தார். (05)

# 11 ஆயிரம் முறைப்பாடுகளின் விசாரணைகள் ஆரம்பிப்பாம்

## மனித உரிமை ஆணைக்குழு அதிரடி

மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக பொதுமக்களால் முன்வைக்கப்பட்ட 11ஆயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகளை உடனடியாக விசாரிப்பதற்கான வேலைத் திட்டத்தினை முன்னெடுத்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அத்துடன் கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகளில் சிலவற்றை பொதுச்சேவை ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, தொழில் திணைக்களம், நுகர்வோர் விவகார அதிகார சபை ஆகியவற்றுக்கு அனுப்பி வைக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்வாறு அனுப்பிவைக்கப்படும் முறைப்பாடுகள் உரிய நிறுவனங்களால் சரியான முறையில் விசாரணை செய்யப்படுகின்றனவா எனக் கண்காணிக்கப்படுமென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளரும், சட்டத்தரணியுமான நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

அத்துடன் கிடைக்கப் பெற்றுள்ள அனைத்து முறைப்பாடுகளையும் உடனடியாக விசாரணை செய்வதன் மூலம், மக்களுக்கான நீதியை நிலைநாட்ட முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)



முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய கொள்கைப் பரப்புச் செயலாளருமான கே.எம்.அப்துல் றஸ்ஸாக் (ஜவாத்) அவர்களால் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கல்முனைக் கிளை காரியாலய பாவனைக்கு ஒரு தொகை கதிரைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.(05)

# கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலர் மன்சூர் தலைமையில் ஒரு குழுவினர் இந்தியா பயணம்

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் அறிவுறுத்தல்களுக்கமைவாக, 4 நாள் இந்தியா - மதுரைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.மன்சூர் தலைமையில் ஒரு குழுவினர் செவ்வாய்க்கிழமை பயணமாகினர். இந்த விஜயத்தின்போது, இந்தியா - மதுரையில் அமையப்பெற்ற மிக முக்கிய தொழிற்சாலைகள், நிறுவனங்கள் போன்ற பல இடங்களை பார்வையிட்டு அங்கு மேற்கொள்ளும் அபிவிருத்தி செயற்திட்டங்களை பார்வையிட்டு அது தொடர்பான விடயங்களை அறிந்துகொண்டு, கிழக்கு மாகாணத்தில் அந்த



அபிவிருத்தி விடயங்களை எவ்வாறு அமுல்படுத்தி கிழக்கு மாணத்தை முன்னேற்றமடையச் செய்ய முடியும் என்பதற்கான கள விஜயமாக இது அமைந்துள்ளது. இந்த விஜயத்தில், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.மன்சூர், கிழக்கு மாகாண கிராமிய கைத்தொழில் திணைக்களத்தின் மாகாணப்பணிப்பாளர் திருமதி யு.கவிதா உள்ளிட்ட அதிகாரிகள் பயணமாகியமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# கல்முனை மஹ்மூத் பாலிஹாவில் மயோனுக்கு துஆ பிரார்த்தனை

## சாதனை மாணவிகள் கௌரவிப்பு







திகாமடுல்ல மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் உயர் கல்வி பிரதி அமைச்சருமான மர்ஹூம் எம்.எம்.எம்.முஸ்தபா (மயோன்) அவர்களுக்கான நினைவேந்தலும், துஆ பிரார்த்தனையும், சாதனை மாணவிகள் கௌரவிப்பும், கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) பதினோராவது அதிபராக கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்ட ஏ.பி. நஸ்மியா சனூஸ் அவர்களின் தலைமையிலான முதலாவது பொது காலை ஆராதனையும் திங்கட்கிழமை கல்லூரி பொது வெளியில் இடம் பெற்றது.

இந்நிகழ்வுக்கு விஷேட விருந்தினராக இக்கல்லூரியில் இருபத்தி ஆறு வருடங்கள் கல்வி வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட முன்னாள் அதிபர் ஏ.ஏச்.ஏ. பஷீர் கலந்து கொண்டார். மேலும் மர்ஹூம் எம்.எம்.எம்.முஸ்தபா (மயோன்) அவர்களுக்கான துஆ பிரார்த்தனை மௌலவி எம்.எம். ஜமால்தீன் அவர்களால் நிகழ்த்தப்பட்டது.

இந்நிகழ்வில் அண்மையில் இடம்பெற்ற கல்முனை கோட்டமட்ட மெய்வல்லுனர் போட்டி நிகழ்ச்சியில் முதலாம் நிலையை பெற்ற மாணவிகளுக்கும், 1,000 இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளுக்கிடையிலான மாகாணமட்ட சமூக விஞ்ஞான போட்டி பரீட்சை - 2023 முதலாம் நிலையில் வெற்றி பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவிகளுக்கும் மற்றும் இலங்கை மாதிரி ஐக்கிய நாடுகள் 16 ஆவது அமர்வு நிகழ்வில் பங்குபற்றிய மாணவிகளுக்கான சான்றிதழ்களை விஷேட அதிதியாக கலந்து கொண்ட முன்னாள் அதிபர் அல்ஹாஜ் ஏ.ஏச்.ஏ. பஷீர் அவர்களால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதி அதிபர் சமதா மசூது லெவ்வை, உதவி அதிபர்களான ஏ.எச். நதீரா, என்.டி. நதீகா, பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)

# குச்சவெளிப் பிரதேச செயலகம் முன்னால் செவ்வாய் கவனவீர்ப்பு




திருகோணமலை - குச்சவெளி பிரதேச செயலகத்துக்கு முன்னால் பாரிய கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

திருகோணமலை - புல்மோட்டை தொடக்கம் நிலாவெளி வரையான கடற்கரைப் பகுதிகளில் புவி சத்திரவியல் சுரங்க திணைக்களத் தலைவரின் தன்னிச்சையான ஒப்பந்தத்தின் மூலம் கனிய மணல் அகழ்வதற்கான ஆராய்வு செய்வதற்கான அளவீடு நடவடிக்கையை உடனடியாக இடைநிறுத்துமாறு கோரியே இந்தக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் பிரதேசவாசிகள், சங்கங்களின் பிரதிநிதிகள், கடற்தொழில் மீன்பிடி சங்கத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டு தங்களின் எதிர்ப்புக்களைத் தெரிவித்தனர்.

இதன்போது, 'அழிக்காதே அழிக்காதே இயற்கை வளத்தை அழிக்காதே', 'சுரண்டாதே சுரண்டாதே மக்களின் வாழ்வாதாரத்தை சுரண்டாதே', 'நிறுத்து நிறுத்து புஆடீ தலைவரின் தன்னிச்சையான முடிவை நிறுத்து', 'அழிக்காதே அழிக்காதே சுற்றுலாத்துறையை அழிக்காதே', 'மண் அகழ்வு ஒப்பந்தத்தை உடன் நிறுத்து' என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்திற்கு விஜயம் செய்த குச்சவெளி பிரதேச செயலாளர் கே.குணநாதனிடம் குறித்த விடயத்தை நாட்டின் ஜனாதிபதி, கிழக்கு ஆளுநர், மாவட்ட செயலாளர் ஆகியோர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லுமாறு கோரிய மகஜரினை ஆர்ப்பாட்டக்காரர்கள் கையளித்தனர். (05)

# கிழக்கில் புதிதாக நியமனம்பெற்ற சுகாதார ஊழியர்களுக்குப் பயிற்சி





அண்மையில் கிழக்கு மாகாண சபையால் பல்நோக்கு அபிவிருத்தி செயலணி ஊழியர்கள் 886 பேருக்கு வழங்கப்பட்ட நிரந்தர நியமனத்தில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட அலுவலகங்களுக்கு நியமிக்கப்பட்ட சுகாதார ஊழியர்கள் 160 பேருக்கான வரவேற்பும், பயிற்சியின் தொடக்கமும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில் சுகாதார சேவைகள் பணிமனை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள், சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே. முரளிதரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு புதிதாக நியமனம் பெற்ற சுகாதார ஊழியர்கள் மத்தியில் உரையாற்றினார். தனது உரையில் இலங்கையிலையே முன்மாதிரியான பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையாக கல்முனை எப்போதும் திகழ்கிறது. இந்த விடயத்திலும் புதிய ஆடை, பயிற்சிநூல்கள், இனிப்பு, உணவு போன்றன வழங்கி அவர்கள் தமது முன்மாதிரியைவெளிக்காட்டியுள்ளார்கள். வேலைப்பழுகாரணமாக இந்தநிகழ்வில் கலந்துகொள்வதில் முழு விருப்பம் எனக்கு ஆரம்பத்தில் இருக்கவில்லை. என்றாலும் சீருடையுடன் 160 புதிய சுகாதார ஊழியர்களை இங்கு கண்டதும் எனக்கு புத்துணர்ச்சி தருகிறது. சுகாதார சேவை தொழிலல்ல. அது விலைமதிப்பற்ற உன்னத சேவை என்றார்.

இங்கு தலைமையுரை நிகழ்த்திய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தனதுரையில், நோயாளர்களை முதலில் சந்திப்பதும் அவர்கள் வீடு திரும்பும்போது அவர்களை வழியனுப்பி வைப்பதும் சுகாதார ஊழியர்களே. தமது வேலையை கடமைக்கு செய்வது போலல்லாது இறைபணியாக நினைத்து செய்ய வேண்டியவர்கள் நீங்கள். நோயாளர்களை இன்முகத்துடன் வரவேற்று அவர்களுக்கு திருப்தியான சேவையை வழங்க முன்வருகின்ற போது அவர்களின் மனம் நிரம்பி நமது சேவை மீதும் மருத்துவ துறை மீதும் அவர்களுக்கு நம்பிக்கை வரும் என்றார்.

இன்று ஆரம்பித்துள்ள இந்த பயிற்சியானது வைத்தியசாலைகள், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்கள், சுகாதார பணிமனை, ஆரம்ப சுகாதார நிலையம், மருந்தகம், களஞ்சியம் போன்ற பல்வேறு இடங்களில் களப் பயிற்சியாகவும் நடைபெறவுள்ளது. முதல் நாள் பயிற்சியை சம்மாந்துறை வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஆசாத் எம். ஹனீபா, அக்கரைப்பற்று வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ரீ.எஸ். ஆர்.ரீ. ஆர்.ரஜாப் ஆகியோர் வழங்கினர்.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பி.எம். வாஜித் உட்பட பிரிவுத்தலைவர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

# யானைத் தாக்கங்களால் ஏற்படுகின்ற சேதங்களை குறைத்தல் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு





அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேச செய லகத்துக்குட்பட்ட மாவடிப்பள்ளி கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் கிராம அலுவலர் ஏ.எம். அலியார் தலைமையில் டெங்கு ஒழிப்பு, யானைத் தாக்கங்களால் ஏற்படுகின்ற சேதங்களை குறைத்தல், இயற்கை அனர்த்தங்களின் எதிர்வு கூறலின் போது முன் ஆயத்தங்களை எவ்வாறு மேற்கொள்வது தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு இடம்பெற்றது.

இதில் வனவிலங்கு பாதுகாப்பு உத்தியோகத்தர், காரைதீவு பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பொது சுகாதாரப் பரிசோதர்கள் போன்ற பலரும் வளவாளர்களாகக் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தினர்.

கிராமிய ஒத்துழைப்புமன்ற உறுப்பினர்கள் பள்ளிவாசல் நிர்வாகிகள், முன் பள்ளி ஆசிரியைகள் என பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (05)

# ஜெய விம திட்ட வீடு காரைதீவில் கையளிப்பு





காரைதீவு பிரதேச செயலக பிரிவில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் 2023 ஆம் ஆண்டிற்காக நடைமுறைப்படுத்தும் 250000 ரூபா அரச பங்களிப்புடன் புணர்நிர்மானம் செய்யப்பட்ட வீடு (ஜெய விம) காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜனால் வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டு பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் எம். பார்த்திபன், சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் காரைதீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (05)

# சாய்ந்தமருது, காரைதீவு கோட்ட கல்வி முன்னேற்றக் கலந்தாய்வு





கல்முனை கல்வி வலயத்தின் சாய்ந்தமருது மற்றும் காரைதீவு கல்விக் கோட்டத்தின் கல்வி முன்னேற்ற கலந்தாய்வு சாய்ந்தமருது கமு/கமு/மல்ஹருஸ் ம்ஸ் மகா வித்தியாலயத்தில் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹறுதுல் நஜீம் தலைமையில் நடைபெற்றது.

இங்கு கருத்து வெளியிட்ட வலயக்கல்வி பண்ணிப்பாளர் அதிபர்களும், ஆசிரியர்களும் இப்பிரதேச கல்வி முன்னேற்றத்துக்கு மிகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். மேலும் பகுதிவாரியாக என்ன பகுதியில் மாணவர்கள் குறைவாக புள்ளி பெறுகிறார்கள் என்பதை பகுப்பாய்வு செய்து அதற்கான வேலைத்திட்டங்களைத் தயாரிக்குமாறு அதிபர்களை அறிவுறுத்தினார். இக்கூட்டத்தில் கல்முனை வலய பிரதிக்கல்வி பணிப்பாளர்களான என். வரணியா, பி. ஜிஹானா ஆலிப், எம்.எச். றியாசா, உதவிக்கல்வி பணிப்பாளரும், சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரியுமான என்.எம். மலிக், உதவிக்கல்வி பணிப்பாளரும், கல்முனை கோட்டக்கல்வி அதிகாரியுமான யூ.எல். றியாழ், காரைதீவு கோட்டக்கல்வி அதிகாரி ஜே. டெவிட் உட்பட அதிபர்கள் கலந்து கொண்டனர். (05)

# கட்சிவிட்டு கட்சி பாய்ந்து முஸ்லிம் காங்கிரஸுக்குள் வருபவர்களிடம் கட்சியைத் தாரைவார்க்க முடியாது

## மு.கா.பிரதிப் பொருளாளர் ஏ.சி.யஹ்யாகான் திட்டவட்டம்



செப்ரெம்பர் 16 ஆம் திகதி நடைபெறவுள்ள மாமனிதர் அஷ்ரப் நினைவு தினம் கட்சியின் தவிசாளர் ஏ.எல். அப்துல் மஜீத் தலைமையில் நடைபெறும் என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மு. கா கட்சியின் பிரதிப் பொருளாளர் ஏ.சி.யஹியாகான் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு -

முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகத்தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் நினைவு தினத்தை முன்னிட்டு நானும் மத்திய குழுவும் இணைந்து சாய்ந்தமருதில் ஏற்பாடுசெய்த கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதேவேளை சாய்ந்தமருது பிரதேசத்தில் கட்சி குறித்த விடயங்களில் நடைபெறும் கருத்து வேறுபாடுகள், அநீதிகள் மற்றும் ஏனைய உள்ளூர் பிரச்சினைகள் என சகல விடயங்களையும் தலைவர் ரவூப்ஹக்கீம் முன்னிலையில் எடுத்துக் கூறினேன்.

கட்சி விட்டு கட்சி பாய்ந்து இறுதியில் முஸ்லிம் காங்கிரஸுக்குள் வருபவர்களிடம் முழுமையாக கட்சியை தாரைவார்த்துக் கொடுப்பதை அனுமதிக்க முடியாது. அதேநேரம் கட்சியின் கதவு திறந்தே இருக்க வேண்டும். இதுவே எமது நிலைப்பாடு என்பதையும் தலைவருக்கு எடுத்துக் கூறினேன் என்று தெரிவித்துள்ளார் .(05)

# சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் எதிர்க் கட்சித் தலைவருடன் பேச்சு



இச்சந்திப்பில் சர்வதேச நாணய நிதியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி சர்வதேச நாணய நிதியத்தின் வதிவிடப் பிரதிநிதி கலாநிதி ஷர்வாட் ஜெஹான் பொருளாதார ஆய்வாளரும், சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதியும் உள்நாட்டு நிரந்தர வதிவிடப் பிரதிநிதியுமான மணாவி அபேவிக்ரம ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் ஆட்சியாளர்கள் அனைத்துக் கடன் வழங்குநர்களையும் நியாயமாக நடத்துவதுடன் அவதானம் செலுத்தப்பட வேண்டிய குழுக்களுக்கு விசேட கவனம் செலுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவிற்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கும் இடையிலான சந்திப்பொன்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றபோது அவர் மேற்கண்ட விடயத்தினை தெரிவித்துள்ளார்.

அத்தோடு எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி, லக்ஷ்மன் கிரியெல்ல, எரான் விக்கிரமரத்ன, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், நாலக கொடஹேவா மற்றும் கபீர் ஹாசிம் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரசன்னமாகியிருந்தனர்.

இதன்போது, சர்வதேச நாணய நிதியம் தற்போதைய இந்த ஆட்சி செய்து கொண்ட ஒப்பந்தம் தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையில் நீண்டநேர கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றது.

இலங்கையானது சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் முன்னேற்றம் மற்றும் இந்த ஆட்சி விரைவில் நிறைவேற்ற வேண்டிய பணிகள் குறித்தான விடயங்கள் குறித்து இங்கு முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டது.

நிலையானதொரு பொருளாதார நல்வாழ்வுக்கு, குறுகியகால பொருளாதார குறிகாட்டிகளின் முன்னேற்றம் போலவே சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சட்டத்தின் ஆட்சி மற்றும் நல்லாட்சிக் கோட்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டிய தேவையின் முக்கியத்துவமும் இங்கு முன்வைக்கப்பட்டது.

அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் விசேட பிரதிநிதிகள் குழுவின் விஜயத்தில், இந்நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை உருவாக்குவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி குழுக்களுக்கு இடையில் கலந்துரையாடப்பட உள்ளதாகவும் இங்கு மேலும் தெரிவிக்கப்பட்டது.

## வாகனங்கள் தவிர அனைத்துக்கும்

# இறக்குமதிக்கான தடை டிசெம்பருக்குள் நீக்கம்



தனியார் மோட்டார் வாகனங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து இறக்குமதிக் கட்டுப்பாடுகளும் எதிர்வரும் டிசெம்பருக்குள் நீக்கப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

2020ஆம் ஆண்டுமுதல் இலங்கையில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடியால் 3,000 க்கும் மேற்பட்ட பொருட்களின் இறக்குமதியை இந்த ஆட்சி கட்டுப்படுத்திய நிலையில் அதுதொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வட்டி விகிதங்களைக் குறைக்கவும், பொருளாதார நெருக்கடியைக் குறைக்கவும் இந்த ஆட்சி பல்வேறு தீர்மானங்களை எடுத்துள்ளது. கடந்தகாலத்தில் 3000 இற்கும் மேற்பட்ட பொருட்களின் இறக்குமதிக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.


தனியார் மோட்டார் வாகனங்கள் தவிர ஏனைய அனைத்து இறக்குமதிக் கட்டுப்பாடுகளும் ஆண்டு இறுதிக்குள் நீக்கப்படும். இலங்கை கடந்த சில மாதங்களாக இறக்குமதிக் கட்டுப்பாடுகளை படிப்படியாக தளர்த்தியுள்ளது.

மோட்டார் வாகனங்களின் இறக்குமதியானது வரி வருவாய்களை இழக்க வழிவகுக்கும் என்பதால் தொடர்ந்து அவற்றுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தபடாதுள்ளது.

கடன்களை பெற அதிக வட்டி விகிதங்களை பேண வேண்டிய தேவையுள்ளது. கார்கள் இறக்குமதிக்கு அதிக வரி விதிக்கப்படுகிறது. அத்துடன், டொலர்களைதான் செலவழிக்கவேண்டியுள்ளது - என்றார்.


JAFFNA'S FIRST HOUSING & CONSTRUCTION EXHIBITION
JAFFNA HOUSING & CONSTRUCTION EXHIBITION 2023
யாழ் மண்ணில் முதல் முறையாக
யாழ் வீடமைப்பு மற்றும் கட்டுமான
கண்காட்சி 2023
FOR ENQUIRY CALL MINHAJ 077 888 2700
கட்டிட நிர்மாணம், வீடமைப்பு மற்றும் வீட்டு உபகரணங்கள் தொடர்பான அனைத்து விடயங்களும் ஒரே கூரையின் கீழ்.
அனைவரையும் அழைக்கின்றோம்
15 16 17
SEPTEMBER
MUTTRAWELI GROUNDS, JAFFNA
Official Sponsor
Hayleys Aventura Innovative Solutions
Organizer
Iyngaran Media Solution (Pvt) Ltd.
In Association
CCI
Chamber of Construction Industry of Sri Lanka
Radio Partner
Print Media Partner
வீரகேசரி
Digital Media Partner
காலைக்கதிர் Kalaikkathir

காலைக்கதிர் Kalaikkathir



உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

## செவ்வழி நயனம்

# நல்லூரின் அதி கோலாகல மஹா உற்சவம்







**1. வரலாற்றுத் திருக்கோயில்**

ஏற்கனவே, தமிழரசர் காலத்தில் இன்றைய முத்திரைச்சந்திக்கு கிழக்காக கிறிஸ்தவ தேவாலயம் இருக்கிற இடத்தில் கந்தசுவாமிக்கு பெரிய கோயில் இருந்தது.

அதை பறங்கியர் 1619 களில் இருந்த அடையாளமே இல்லாமல் அழித்து விட்டு தேவாலயம் கட்டியிருந்தனர்.

அப்போது கோயிற் பணிவிடைக்காரர் சில பொருட்களை எடுத்துக்கொண்டு மட்டக்களப்புக்கு ஓடினர்.

பிராமணர்கள் உயிரைக் கையிற் பிடித்துக்கொண்டுநீர்வேலிக்குஓடினர்என்று யாழ்ப்பாண வைபவ மாலை, யாழ்ப்பாண சரித்திரம் என்பன சொல்கின்றன.

எனவே, அந்தபறங்கியரின்தேவாலயம் ஒல்லாந்தர் கால தேவாலயமாக மாறியது.

அதற்கு அருகே, ஒல்லாந்தர் கால பிற்பகுதியில் (1700 களின் ஆரம்பத்தில்) மத சுதந்திரம் கொடுக்கப்பட்டதும் சிலர் முருகவழிபாடுசெய்யத்தொடங்கியிருந்தனர். இது கிறிஸ்தவ சார்பு அரசியலாருக்கு பெரிய இடர்பாடாக இருந்தது.

எனவே, குறித்த வழிபாட்டை இடம் நகர்த்த வேண்டும் என்று பார்த்திருந்தனர்.

**2. இன்றைய எழிலுறு கோயில்**

ஒல்லாந்த அரசில் உயர் பதவியில் இருந்தவர் இரகுநாத மாப்பாண முதலியார். முருக பக்தியில் தோய்ந்த முதலியார் முருகனுக்கு நல்லூரில் கோயில் கட்ட விரும்பினார்.

அவருக்கு கிடைத்த குருக்கள் வளவு என்ற புதிய காணியில் முருகன் கோயில் கொள்ளச் சித்தமானான். அரச அனுமதியும் கிடைத்தது.

சிறு கோயில் எழுந்தது. வள்ளல் பெருமான் வேல் வடிவமாக நல்லூர் நகரின் நடுவே அந்தச் சிற்றாலயத்தில் கொலு இருக்கத் தொடங்கினான்.

**3. நல்லூரின் வளர்ச்சி**

காலம் ஓடியது. கோபுரங்கள் எழுந்தது. உயர்ந்த மதில்களுடன் பிரகாரங்கள் ஏற்பட்டது. தேரோடியது.

நல்லூர் கந்தசுவாமி கோயில் நிமிர்ந்தது. அவனது அருளாட்சி நல்லூரை தலமாக கொண்டு அகிலமெங்கும் நடக்கத்தொடங்கியது.

இப்போது இந்த மாப்பாணர் மரபின் 11 ஆவது கோயிற் பரிபாலகராக குகஸ்ரீ. குமரேச சயந்தன மாப்பாண முதலியார் பணியாற்றி வருகிறார்.

ஆண்டு தோறும் புதுப்பிக்கப்படுகிற இக்கோயிலில்கருவறைமேல்கேரளப்பாணி விமானம் அமைந்திருக்கிறது. புதிய குமார கோபுரம் உள்ளடங்கலாக ஐந்து இராஜகோபுரங்கள் அமைந்துள்ளன.

ஷண்முகரது சந்நதி தங்க கூரை வேயப்பட்டிருக்கிறது.

கர்பகிரஹத்தில் விளக்கொளியில் வேற்பெருமான் தம்மிரு சக்தியரோடு காருண்ய மூர்த்தியாக காட்சி தருகிறார். சித்தர்களின் அரூப வாசம் அங்கே இணைவதால் அருள் பிரவாகிக்கிறது.

**4. பைரவரின் சிறப்பு**

நல்லூரில்ஈசானதிசையில்கோயிலின் க்ஷேத்திர பாலரான பைரவர் கிழக்கு நோக்கி காட்சி தருகிறார்.

இவர் தான் அலங்கார கந்தனின் பொக்கிஷங்களுக்கெல்லாம்காவற்தெய்வம். எக்காரியம் செய்யினும் அவற்றை தடை இன்றி நடத்திக் கொடுக்கும் தெய்வம்.

ஆவணிப்பெருவிழாவின் ஆரம்பமும் நிறைவும் இவரது உலாவோடு தான் ஆரம்பமாகி நிறைவு பெறும்.

**5. ஆவணிப் பெருவிழா - வழிபாடுகள்**

நல்லூர் பெருவிழா நம் தேசியத்திருவிழா. ஆடிஅமாவாசைகழிந்த ஆறாம் நாள் தொடங்கி இருபத்தைந்து நாட்கள் இந்த மஹா உத்ஸவம் நடக்கிறது.

நேர முகாமை, அரசியல்- வணிக தலையீடுகளுக்கும் முதன்மைக்கும் இடம் தராமை, கட்டுப்பாடு, புனிதம் இவைகளோடு கூடிய இந்த அழகு கந்தனின் பெருவிழா மட்டுமல்ல நித்திய பூஜை வழிபாடுகளும் வியப்பை தருவன.

**6. ஷண்முகநாத வள்ளல்**

நல்லூரின் தலைமைத் தெய்வம் ஷண்முக வள்ளல். பொற்சபையில் காட்சி தரும் இவருக்கு நல்லூரில் வழங்கப்படும் முதன்மை சிதம்பரத்தில் ஆனந்த நடராஜ மூர்த்திக்கு வழங்கப்படும் முதன்மை போன்றது.

இவரது சபைக்கு முன்னே இரண்டு ராஜகோபுரங்கள், பின்னே இரண்டு ராஜ கோபுரங்கள் அணி செய்கின்றன.

அவன் முன்றலில் ஷண்முக புஷ்கரணியும் அருகே கூப தீர்த்தமும் காணப்படுகின்றன.

கோயில் தல விருக்ஷமாக கருதக்கூடிய காஞ்சிமாவைத்தழுவும் காற்றுஷண்முகநாதனை தழுவும். 1918 ஆம் ஆண்டளவில் ஸ்தாபிக்கப்பட்ட இப்பெருமான் நூற்றாண்டு கண்ட மூர்த்தி.

அழகிய சித்ர மயூராசனத்தில் எழுந்தருளி தன் குஞ்சித பாதத்தை காட்டி, அபய ஹஸ்தனாக தேவியரோடு காட்சி தரும் ஷண்முக வள்ளலை ஒரு முறை தரிசிக்கினும் கண்ணை விட்டு நீங்காத பேரழகன் அவன்.

**7. நல்லூர்த் தேர்**

நல்லூர்ப் பெருவிழாவின் முக்கிய நிகழ்ச்சிதிருத்தேரோட்டம்ஆகும். சிவயோக சுவாமிகள் தவமிருந்த தேரடியில் உள்ள மாப்பாணர் கட்டடக்கலை மரபில் அமைந்த ரதமண்டபத்தினுள் உள்ள அழகிய திருத்தேரில் ஆறுமாமுக வள்ளல் எழுந்தருள்வதைக் காண உலகெங்கும் இருந்து ஆயிரமாயிரம் அடியார்கள் அலை கடல் எனத்திரள்வர்.

அரோஹரா என்று கோஷமிட்டு உச்சி மீது கை வைத்து முருக வேளைப் போற்றித்துதிப்பர். இது தான் கந்த புராணம் சொன்ன பெருமானின் மனோரதம் என்ற தேரோ என வியப்பர்.

**7. நிறைவு**

நல்லூரை குறித்து சொல்ல எத்தனையோ செய்திகள். முகாமைத்துவ நேர்த்தி, சுற்றிலுமிருக்கும் பண்பாட்டுச் சூழல், கலை வடிவங்கள், வேத சம்ரக்ஷணை, திருமுறைக்கான முதன்மை, இன்று வரை நீளுகிற கோயிலின் இசைப் பாரம்பர்யம், கோயில் மணலில் விளையாடும் குழந்தைகள், குழந்தைகளாகி குதூகலிக்கும் பெரியவர்கள் என்று எவ்வளவோ எவ்வளவோவிஷயங்களைச்சொல்லலாம்.

**"தேவ ரம்பையமு தீண மங்கைதரு**
**மான ணைந்தபுய தீர சங்கர**
**தியாகர் வந்துறைந(ல்)லூரமர்ந்துவளர்**
**தம்பிரானே"**

என்று அருணகிரிநாதர் பாடுவார்.

**ஆறுமுடியாட ஆறுமுகமாட**
**ஆரவடமாட வரை போலிர்**
**ஆறுபுயமாட ஞான அருளூறி**
**ஆறுவிழியாட நகையாட**
**வீறு கனலாட வாகு வலமாட**
**வீசு படையாட விளையாட**
**வேத பரணாட கீத கழலாட**
**வேடுவ குமாரி வலமாட**
**ஏறு மயிலாடக் கூறுமயிலாட**
**ஈறில் பிடியானை இடமாட**
**ஏழுலகுமாட ஏழுபவமாட**
**ஞான நடமாடும் முருகேசா**
**நாறுமலர் தாதராறு பதமேவி**
**நாத இசைபாடும் பொழில் சூழும்**
**ஞான தவயோகர் சேரு நல்லையூரில்**
**நாளும் அருள் கூடும் பெருமாளே**

என்று பாடுவார் நவாலியூர் சோமசுந்தரப்புலவர்.

இப்படிநம்மைஆட்டுவிக்கும்பெருமாள் - கோலாகலமாக ஆடி வரும் பெருமாள் -நல்லூரின் பெருமாள் - அடியார்க்கெளிய பெருமாள்.

உலகின் எப்பாகத்திலிருப்பினும் அவன் நாமம் சொல்வோம். அவன் எம் எல்லோரையும் வாழ வைப்பான்.

--

**தி. மயூரகிரிக்குருக்கள்**

# நல்லூர் கட்டுரைப் போட்டிமுடிவுகள் வெளியாகின

## செப். 15 பரிசளிப்பு விழா

நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டு கலைக்கூடல் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசுவாமி கோயில் பெருந்திருவிழாவையொட்டி நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டி - 2023 முடிவுகள் வெளியாகின.

போட்டிகளின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு செப்டெம்பர்15காலை8.30மணிக்குநல்லூர்பூங்காவன உற்சவ தினத்தன்று நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பரிசில் பெறும் மாணவ மாணவிகளை கலாசார உடையுடன் வருகை தருமாறு கலைக்கூடல் கேட்டுள்ளது.

பரிசு பெற்றோர் விவரங்கள் வருமாறு.

**கனிஷ்ட பிரிவு முடிவுகள்:**

மாணவர் பெயர் பாடசாலை நிலை

நந்தகுமார் வினுசியா யா/திருக்குடும்ப கன்னியர் மடம் 1ம் இடம்

பா.யசிந்தா யா/கோப்பாய் நாவலர் வித்தியாலயம் 2ம் இடம்

சுதர்சன் கிருஷிகா யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி 3ம் இடம்

சுதாஸ்குமார் துளசிகன் யா/ இடைக்காடு மகா வித்தியாலயம் 4ம் இடம்

தி.அனிஸ்காந் யா/ கோப்பாய் நாலர் தமிழ் வித்தி. 5ம் இடம்

உ.கிரோஷிகா யா/அச்சுவேலி மத்திய கல்லூரி 5ம் இடம்

ஜானகுமார் ஜயனிகா யா/சுண்டிக்குளி மகளிர் கல்லஊரி 7ம் இடம்

ந.அனுஸ்கா யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி 7ம் இடம்

கு.லக்ஸிகா யா/கோப்பாய் நாலர் தமிழ் வித்தி. 9ம் இடம்

சந்திரகுமார் சாகித்தியன் யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தி. 9ம் இடம்

ம.தனுஜன் யா/ செங்குந்தா இந்து கல்லூரி 9ம் இடம்

**மத்திய பிரிவு முடிவுகள்**

மாணவர் பெயர் பாடசாலை நிலை

அபிநயா சிறிகந்தராஜா யா/திருக்குடும்ப கன்னியர் மடம் 1ம் இடம்

இளநிலா மதீஸ்வரன் யா/ ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி 2ம் இடம்

சு.கேம்சிதா யா/கொக்குவில் இந்து கல்லூரி 3ம் இடம்

அபிசானி அனுசன் யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி 4ம் இடம்

ருட்சாரணி அகிலேஸ்வரன் யா/ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி 5ம் இடம்

சசிக்குமார் பவிசன் யா/ யாழ்ப்பாணம் இந்து கல்லூரி 6ம் இடம்

ருசாளினி அன்பழகன் யா/இந்து மகளிர் கல்லூரி 6ம் இடம்

கம்சனா கேணேஸ்வரன் யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை 6ம் இடம்

பிரஸ்ணவி குகதர்சன் யா/அச்சுவேலி மத்திய கல்லூரி 6ம் இடம்

ஜஸ்மினி விஜயரூபன் யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தி. 6ம் இடம்

**மேற் பிரிவு முடிவுகள்**

மாணவர் பெயர் பாடசாலை நிலை

ந.டிலக்ஷிகா யா/திருக்குடும்ப கன்னியர் மடம் 1ம் இடம்

குணராஜா பானுஜா யா/ ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி 2ம் இடம்

ப.திவ்வியா யா/திருக்குடும்ப கன்னியர் மடம் 3ம் இடம்

ட.சஜிந்தன் யா/ யாழ்ப்பாணம் இந்து கல்லூரி 4ம் இடம்

ப.ஆரணி யா/வைத்தீஸ்வரா கல்லூரி 5ம் இடம்

தவகுமார் டிசாளினி யா/இந்து மகளிர் கல்லூரி 6ம் இடம்

இராஜேஸ்வரன் தரணிகா யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை 7ம் இடம்

சிவகுமார் சர்மிதா யா/அத்தியார் இந்து கல்லூரி 8ம் இடம்

க.சஜீனா யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி 9ம் இடம்

த.டர்சிகா யா/ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி 10ம் இடம்




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.09.2023இல் வெளியிடப்பெற்றது.